Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...




C/346

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA


412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 19 திங்கட்கிழமை (03.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 95

## புதிய பொது முன்னணி அமைத்து பொதுச்சின்னத்தில் போட்டியிட முடிவு

### சூடுபிடிக்கும் தேர்தல் களம்



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் நான்கு தமிழ் கட்சிகள் இணைந்து பொது முன்னணி ஒன்றை உருவாக்கி பொதுச்சின்னம் ஒன்றில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிவாஜிலிங்கம் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளான தமிழ்தேசிய விடுதலை முன்னணி, புளொட்,


(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் போட்டியிடுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெருமளவு தமிழர்கள் வசிக்கும் கொழும்பு மாவட்டத்தில், ஒரு சில தமிழ் உறுப்பினர்கள் வெல்வதற்கான வாய்ப்பு இருப்பதாக கூட்டமைப்பின் தலைமைப் பீடம் நம்பிக்கை கொண்டுள்ளது



வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் முடிவில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முடிவை மாற்றியது ஐ.நா. நிபுணர் குழு; இலங்கைக்கு செல்வதில்லை என்று தீர்மானம்


## அரசுடன் இணங்க மறுக்கிறது ஐ.நா. குழு

(லண்டன்)

**ஐ.நா நிபுணர்குழுவின் இலங்கைக்கான பயணம் மேற்கொள்ளும் முடிவைக் கைவிட்டுள்ளதாகவும், இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என்றும் கொழும்பு ஆங்கில வார ஏடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

ஐ.நா நிபுணர்குழு இலங்கை குழுவை மட்டுமே சந்திக்க முடியும், வருவதற்கு நுழைவு அனுமதி வேறுயாரையும் சந்திக்கவோ விசா வழங்கத்தயார் என்றும், ஆனால் ரணை நடத்தவோ முடியாது என்றும் அவர்கள் நல்லிணக்க ஆணைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் யுத்தக்குற்ற அறிக்கை

(ஜெனீவா)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய காரசாரமான அறிக்கை ஒன்று சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் இந்த அமர்வின் போது இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்றை முன்மொழிவதற்கான ஏற்பாடுகள் தற்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்; கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக அரசு நூற்றி எண்பது கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுடைச் செய்துள்ளது.

பொதுவாக நாடளாவிய ரீதியாக இடம்பெறும் தேர்தல் ஒன்றுக்கு இவ்வாறான நிதி ஒதுக்கப்படும் என தேர்தல் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதிக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் பிரி. தூதுவர் நியமனம் அரசின் தலையைக்குடையும் சிக்கல்

### நல்லுறவை மீண்டும் கட்டி வளர்க்கவும் முயற்சி

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் நிஹால் ஜெயசிங்க தனது பதவிக்காலத்தை இந்த வாரத்துடன் பூர்த்திசெய்யும் நிலையில், அடுத்த புதிய தூதுவராக யாரை நியமிப்பது என்பதில் இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி அட்மிரல் வசந்தா கர்னாகொட பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக் கப்படுவார் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த



(11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு–ஐ.நா.நிபுணர்குழு முறுகல்; இரு தரப்பும் கருத்தியல் யுத்தம்

(கொழும்பு)

அரசுக்கும் ஐ.நா.நிபுணர் குழுவுக்குமிடையில் ஏற்கனவே காணப்பட்ட முறுகல் நிலை மேலும் வலுவடைந்து செல்கிறது.

ஐ.நா நிபுணர்குழு இங்கு வந்து சாட்சிகளை விசாரித்து, தமது சொந்த நீதிமன்றத்தை இந்த நாட்டில் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்ததைத் தொடர்ந்து இரு தரப்புக்குமிடையில் கடுமையான கருத்து மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

பொதுவாக நாட்டுக்கு எந்தவொரு சிறப்புக் குழு வருவதானாலும் அது பற்றிய தகவல்கள் முன்கூட்டியே

(11 ஆம் பக்கம் பார்க்க)

## விமான எதிர்ப்புத் தோட்டாக்கள் வன்னியிலிருந்து படையினரால் மீட்பு!

(கொழும்பு)

.வன்னியில் புளியங்குளம் மற்றும் மணிராசகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின்போது 0.23 மி.மீ. விமான எதிர்ப்பு துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 88 தோட்டாக்களை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

தலா 5 கிலோ எடையுடைய 2 கிளைமோர்கள், 25 டெட்டோனேட்டர்கள், 7.62 மி.மீ. இயந்திர துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 750 தோட்டாக்கள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கில் அமெரிக்க யுத்த ஆய்வு



(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளில் நடந்து முடிந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பாதிப்புக்களையும் அதன் பல்வேறு வகையான தாக்கங்களையும் ஆய்வு செய்து கொள்வதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

வட-கிழக்கில் செயற்படும் பல்வேறு அரசசார்பற்ற அமைப்புக்களின் ஊடாக மேற்படி யுத்தப்பாதிப்புத் தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்கு அமெரிக்க அரசு தற்போது நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இவ்வாறானதொரு யுத்த ஆய்வை சனத் தொகைக் கணக்கெடுப்பு என்ற போர்வையில் உலகவங்கியூடாக நிதி உதவியை வழங்கி மிக கனகச்சிதமாக தகவல்களைத்திரட்ட அமெரிக்க அரசு ஏற்கனவே முயற்சி ஒன்றைச்செய்திருந்தது.

இவ்வாறான கணக்கெடுப்பை இலங்கையின் புள்ளி விபரத்திணைக்களத்தின் ஊடாக நடத்துவதன் மூலம் யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பான சகல விபரங்களையும் வழுக்கள்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு – கூட்டமைப்பு பேச்சு நிகழ்ச்சிநிரல் தயாராகிறது



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளது.

இது தொடர்பான தகவல்களை அரசாங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் உறுதிப்படுத்தியுள்ள போதிலும், மேலதிக தகவல்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டன.

கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் புதுடெல்லி திரும்பியவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், இந்தத் தகவலையடுத்து கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் சென்னை சென்று அங்கு மருத்துவ சிகிச்சைக்குள்ளாகியுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர் கொழும்பு திரும்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அமைச்சர்கள் குழுவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என அரச தரப்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. இந்தப் பேச்சுக்கள் அடுத்த சில தினங்களுக்குள் ஆரம்பமாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக ஏற்கனவே இருதரப்பும் கலந்துரையாடல்களை நடத்தியிருப்பதுடன் அரசியல் தீர்வு தொடர்பான நேரடிப் பேச்சுவார்த்தையை அடுத்த வாரமே ஆரம்பிக்கின்றன எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது அரசியல் தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை முன்வைக்கவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு காண்பதைப் பற்றிய பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி ஏற்கனவே அரசுடன் கலந்துரையாடியுள்ளோம். அதன்படி, அடுத்த வாரம் பூர்வாங்கப் பேச்சுவார்த்தையை அரசுடன் கூட்டமைப்பு ஆரம்பிக்கின்றது என்று குறிப்பிட்ட கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர், புதிய தீர்வு யோசனையொன்றை கூட்டமைப்பு முன்வைக்குமென்றும் கூறினார்.

இதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரங்களுடன் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை, அரசியல் தீர்வின் ஆரம்பக் கட்டமாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி வெளிப்படையாகக் கூறியுள்ளதாகவும் 13 ஆவது திருத்தச் சட்டக் கட்டமைப்புக்குள் ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு கூட்டமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் தடைகள் இருப்பின் அவற்றைக் களைவதற்கான சட்டங்கள் வகுக்கப்படுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தாதியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் திருச்சிலுவை சுகநல நிலையம் இரண்டு வருட தாதியர் டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் இப்பயிற்சிநெறியினைப் பின்பற்ற முடியும். கற்கைநெறிக் கட்டணமாக 750 ரூபா அறவிடப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் சுயவிலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர், திருச்சிலுவை சுகநல நிலையம், 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாமென பணிப்பாளர் அறிவித்துள்ளார். (10)

## வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு விசா புதிய நடைமுறை அறிமுகமாகிறது

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கை வந்திறங்கியதும் ஸ்தலத்திலேயே விசா வழங்கும் முறையை நீக்கி அதற்குப் பதிலாக நேர் அலை விசா விண்ணப்ப முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மாலை மற்றும் சிங்கப்பூர் பிரஜைகளுக்கு இத்திட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய முறை கடந்த ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவிருந்தது. சுற்றுலாத்துறையினரின் ஆட்சேபத்தையடுத்தே இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது என்று குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரவிரும்பும் வெளிநாட்டுப் பயணிகள் விசா பெறுவதற்கு இலங்கைத் தூதுவர் திணைக்களத்திற்கு செல்வது சுற்றுலாத் துறையைப் பாதிக்கும் என்று இலங்கை சுற்றுலாத் துறையினர் கவலை தெரிவித்ததையடுத்தே புதிய முறை பிற்போடப்பட்டது என்றார்.


கடந்த வெள்ளியன்று வெளியான ஜனாதிபதி அலுவலக அறிக்கை ஒன்றில் விரைவில் இணையத்தளம் மூலம் விசா பெறும் முறை ஒன்றை நடைமுறைப்படுத்தும்படி அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை கடவுச்சீட்டுகளுக்கு இலங்கையினுள் வரும் அனுமதி பழைய முறையின்படியே வழங்கப்படும்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திறங்கியதும் ஸ்தலத்திலேயே 30 நாள் விசா வழங்கும் முறை 1970 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவே இம்முறை கையாளப்பட்டது.

## கண்காணிப்பு கமராவில் சிக்கிய 300 சாரதிகள்!



(கொழும்பு)

கொழும்பு நகரில் பொருத்தப்பட்டுள்ள நெருங்கிய காட்சிகளை பதிவு செய்யும் சீ.சீ.டீ.வி கமராக்களினால் புதுவருட தினத்தின் போது, போக்குவரத்து ஒழுங்குகளை மீறிய சாரதிகள் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

300க்கும் அதிகமான வாகன சாரதிகள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் பிரதி மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸாரால் இதுவரையில் தேடப்பட்டு வந்த பலரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் போக்குவரத்து ஒழுங்குகளை மீறிய வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, போக்குவரத்துப் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளையும் இதன் மூலம் காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணித்தகராறு அடிதடியில்; நால்வர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

காணித் தகராறு காரணமாக குருநகர், திருநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து மற்றொரு வீட்டுக்காரர்கள் தாக்குதல் நடத்தியதில் 7 மாத கர்ப்பிணிப் பெண் உட்பட நால்வர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

நேற்று பி.ப 2.30 மணியளவில் குருநகர், திருநகர் பகுதியில் உள்ள சூசை அந்தோனியார் என்பவரின் வீட்டிற்குள் புகுந்த அயல் வீட்டுக்காரர்கள் பொல்லுகள், தடிகளால் கடுமையாக அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் அந்தோனியார் என்பவருக்கு தலையிலும், முகத்திலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளது. அவரது பற்களும் உடைந்துள்ளது.

அவரது மகளான அலோபியஸ் அன்ரனீற்றா (வயது - 28) என்ற 7 மாத கர்ப்பிணிப் பெண்ணும் அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளார். அத்துடன் அ.வின்சிலோஸ் (வயது - 43), அ.லூர்து மேரி (வயது - 22) ஆகியோரும் அடிகாயங்களுக்குள்ளாகினர்.

இவர்கள் நால்வரும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

## வெள்ளப் பாதிப்பு இழப்பீடு மேலதிகமாக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த 2010 ஆம் ஆண்டில் சுமார் 300 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ள அதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் 200 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

காலநிலை சீர்கேடு காரணமாக சேதமடைந்துள்ள வீடுகளின் நிர்மாணப் பணிகளுக்காக 200 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தற்போது அறிவித்துள்ளது.

கடந்த ஜுன் மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 50 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

நவம்பர் மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 20 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.

கடந்த மே மாதம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 40 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## யாழ்தேவி புகையிரத சேவை இம்மாதம் முதல் ஓமந்தை வரை நீடிப்பு

(கொழும்பு)


கொழும்புக்கும் தாண்டிக்குளத்துக்கும் இடையில் பயணிக்கும் யாழ்தேவி புகையிரதம் இந்த மாதம் முதல் ஓமந்தை வரையான தமது பயணத்தை நீடிக்கும் என பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான பாதை நிர்மாணப் பணிகள் முடியும் தறுவாயில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையிலான 159 கிலோமீற்றர் புகையிரதப் பாதை மீள்புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பாதையின் ஊடாக 16 பிரதான புகையிரத நிலையங்களும், 12 துணை நிலையங்களுடன் 85 பாலங்களும் காணப்படுகின்றன.

இந்தியாவின் புகையிரதப் பாதை நிர்மாண நிறுவனம் இந்த பாதையை புனரமைத்து வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் புதிய சமிக்ஞை முறைமை மற்றும் தொலைத் தொடர்பாடல் வலையமைப்பு முறைமை என்பனவும் உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்த நிலையில் தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையிலான புகையிரத பயணப்பாதை நிர்மாணப்பணிகள் இறுதி நிலையை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த மாதத்தில் இருந்து யாழ்தேவி புகையிரதம் ஓமந்தை வரையில் பயணிக்கக் கூடியதாக இருக்கும் என புகையிரத திணைக்களத்தை மேற்கோள்காட்டி பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

மனித குலத்தைவிட உயர்ந்தது எதுவும் இல்லை. எவனும் தன்னை இழிவாக எண்ணுதல் கூடாது. தன்னை இழிவாக எண்ணுபவன் எப்பொழுதும் வெற்றி யடையமாட்டான்.

-மகாபாரதம்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மனம் தளராத விவசாயிகள்

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை குடாநாட்டு விவசாயிகளின் விவசாயச் செய்கைகளிலும், விவசாய உற்பத்திப் பொருட்களை நுகரும் மக்களையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

கோடை வெய்யிலும் மாரி மழையும் என்ற நிலை மாறி இரு காலத்திலும் வெய்யிலும் மழையும் இருந்து வருகிறது.

இந்த மாற்றம் விவசாயத்தையே முழுக்க, முழுக்க நம்பி வாழும் விவசாயிகளுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

மாரியில் பெய்ய வேண்டிய மழை கோடையில் பெய்யும்போது கோடை காலத்துக்குரிய பயிர்ச் செய்கையை விவசாயிகளினால் மேற்கொள்ள முடியாது உள்ளது.

மழையை நம்பியே பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். நெல் விதைக்கும் காலத்தில் மழை பெய்யாது விட்டால் உரிய காலத்தில் விதைப்பை மேற்கொள்ள முடியாதுள்ளது.

மண்ணை நம்பி பெருந்தொகைப் பணத்தை அம்மண்ணில் முதலீடு செய்த விவசாயிகள் அதன் பலனைப் பெற முடியாதவாறு இயற்கை அனர்த்தம் அவர்களை வஞ்சித்து வருகிறது.

கடந்த வருட இறுதியில் பெய்த பெருமழையும், சீரற்ற காலநிலை மற்றும் சீதோஷ்ண நிலைமாற்றம் என்பன விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளது.

இப்பாதிப்பு மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கே ஏற்படுகிறது.

ஏ-9 பாதைப் போக்குவரத்து சகஜ நிலைக்குத் திரும்பிய கையோடு, வன்னியில் இருந்தும், தென் பகுதிகளில் இருந்தும் பெருமளவு எருப்பசளை எடுத்து வரப்பட்டது.

இது விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருந்ததுடன், இரசாயனப் பசளைப் பாவனையையும் பெருமளவு குறைக்கச் செய்தது.

எனினும், பசளை வாங்குவதற்கெனக் கொடுத்த பெருந்தொகைப் பணத்தை அந்த விவசாயிகள் உற்பத்திப் பொருள் மூலம் மீளப் பெறமுடியாத அளவுக்கு இயற்கை அனர்த்தம் மேலோங்கி வருகிறது.

தற்போது காணப்படும் சீரற்ற காலநிலை குறுகிய கால மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளையே பெருமளவு பாதித்துள்ளதுடன், அவர்களின் அன்றாட வாழ்க்கையையும் பாதித்துள்ளது.

பாதிப்புக்குள்ளான காலநிலையில் மரக்கறிச் செய்கைப் பாதிப்புக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில், தமது விவசாய முயற்சிகளில் இருந்து ஒதுங்கியமையால், தமது வாழ்வாதார ஸ்திரத் தன்மையைப் பேணமுடியாதவர்களாகி விட்டனர்.

இதன் காரணமாக மரக்கறி வகைகளின் விலை மலைபோல் ஏறியுள்ளது. இந்நிலையானது, விவசாய உற்பத்தியாளர்களைப் பாதித்தது மட்டுமல்லாமல், நுகர்வோரையும் பெருமளவு பாதித்து, அவர்களது வாழ்க்கைச் செலவையும் அதிகரிக்கச செய்துள்ளது.

குறிப்பாக குடாநாட்டில் உள்ள வெங்காயச் செய்கையாளர்களும், மரக்கறிச் செய்கையாளர்களும் அடைமழையின் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான போதும், அவர்களுக்கு எந்தவிதமான மாற்று உதவிகள் எவராலும் வழங்கப்படவில்லை.

இதனால், பாதிப்புக்குள்ளான விவசாயிகள் கால நிலைக்கேற்ற வகையில் பணத்தை ஈட்டிக் கொடுக்கும் பணப்பயிர் புகையிலை செய்கையில் நாட்டம் காட்டி வருகின்றனர்.

அவர்களது மனம் தளராத விவ்சாய முயற்சியானது, என்றும் தம்மைக் கைவிடமாட்டாது என்ற நம்பிக்கையில் உள்ளது.

அவர்களின் அந்த நம்பிக்கை என்றும் வீண் போக மாட்டாது என்பது திண்ணம்.

- ஆசிரியர்.

# சிறுபான்மைக் கட்சிகள் எதிர்கால தேர்தலில் ஐ.தே.க. உறுப்பினராகவே போட்டியிடலாம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பி ஆதரவு வழங்கி வரும் சிறுபான்மைக் கட்சிகள் பெரும் திண்டாட்டத்தை எதிர்நோக்கியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணிக் கட்சியாக உடன்படிக்கை செய்து கொண்டு இனி மேல் அந்தக் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கக் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் ஐ.தே.க சார்பு சிறுபான்மைக் கட்சிகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் நீண்டகாலமாக அந்தக் கட்சியை நம்பிய தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மீண்டும் துரோகம் இழைத்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிடுவதாக இருந்தால் கூட்டணியாக அன்று ஐ.தே.க. உறுப்பினரா அங்கத்துவம் பெற்றே போட்டியிட வேண்டுமென அண்மையில் நடந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் நீண்ட காலமாக செயற்பட்டு வரும் சிறுபான்மை உறுப்பினர்களின் நலன்கருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது. எவ்வாறாக இருந்தாலும் இந்தத் தீர்மானம் ஐ.தே.க. சார்பு சிறுபான்மைக் கட்சிகளுக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம் என்று சிறுபான்மைக் கட்சியொன்றின் அமைப்பாளர் ஒருவர் விசனம் தெரிவித்தார்.

இதன் காரணமாக கட்சியைக் கலைத்துவிட்டு ஐ.தே.க.வுடன் சங்கமித்துவிடுவதா? அல்லது தனிச் சின்னத்தில் தேர்தலில் நின்று தோல்வியைச் சந்திப்பதா? என்பது பற்றிய எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாமல் சிறுபான்மைக் கட்சிகள் திணற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் ஐ.தே.க. எடுத்துள்ள இத்தீர்மானம் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதுடன், அந்தக் கட்சியை நம்பி வாக்களித்த மக்களையும் உதாசீனம் செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் எதிர்காலத்தில் ஐ.தே.க. சிறுபான்மை மக்களின் ஆதரவை முழுமையாக இழந்து விடுமென்றும் அந்த அமைப்பாளர் மேலும் கூறினார்.

## 22 வருடங்களின் பின்னர் இன்று ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயம் இன்று முதல் திறக்கப்படவுள்ளது. 1991 இல் காரைநகரில் ஏற்பட்ட இடப்பெயர்வைத் தொடர்ந்து கடந்த இருபது வருடங்களாக இப்பாடசாலை மூடப்பட்ட நிலையில் இருந்தது.

அண்மைக் காலங்களில் இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கிய பின்னர் இப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தீவக வலயக் கல்வி அலுவலகம் இப்பாடசாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்காக இலங்கை அதிபர் சேவை அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம் I அல்லது தரம் II ஐச் சேர்ந்தவர்களிடம் கடந்த மாதம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50,10)

## அரிசி ஏற்றுமதிக்கு அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நெல் மேலதிகமாக உள்ளதால் அரசு அரிசியை ஏற்றுமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்-

அரச நெற்களஞ்சியங்களில் நெல் தேவைக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதால் தரமான அரிசியை சர்வதேச சந்தையில் விற்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். கடந்த சிறு மற்றும் பெரும் போகங்களில் கூடுதலான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதால், அமைச்சு பெருமளவில் நெல்லைக் களஞ்சியங்களில் சேமித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பகிடி வதை காரணமாக சப்ரகமுவ பல்கலை மூடல்

(கொழும்பு)

சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதைச் சம்பவங்கள் இடம்பெற்றமையை காரணமாகக் கொண்டே இவ்வாறு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் எச்.எம்.எஸ். பிரியநாத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சப்ரகமுவப் பல்கலைக் கழகத்தினுள் பகிடி வதைகள் இடம்பெறவில்லை என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. பொய்யான காரணங்களை முன்வைத்துப் பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தனுஸ்க திசாநாயக்க தெரிவித்தார்.

## நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சங்கானைப் பகுதியில் புகையூட்டல்

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து அதிகரித்த நுளம்புப் பெருக்கத்தைக் கட் டுப்படுத்தும் வகையில் சங்கானைப் பகுதியிலுள்ள பொதுச் சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் கூடும் இடங்களான சங்கானைச் சந்தைப் பகுதி, அராலி வீதி, நிச்சாமம் ஆகிய இடங்களில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இப்பகுதிகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நேரடியாக மேற்பார்வை செய்ததை அடுத்து கடந்த இரண்டு நாட்களாக புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

புகையூட்டல் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் டெங்கு நோயாளிகள் எவரும் அண்மைக் காலமாக இனங்காணப்படவில்லை எனவும், இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எனவும் பொதுச் சுகாதாரப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (54)

## புதிய கல்வியாண்டிற்கான பாடசாலை தவணைகள்

புதிய கல்வியாண்டிற்கான பாடசாலைத் தவணைகள் குறித்து கல்வி அமைச்சு சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகள் என்பவற்றுக்கு அறி வித்துள்ளது. 2011 ஆம் கல்வியாண்டிற்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று 3 ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர அறிவித்துள்ளார். சகல பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் புதிய கல்வியாண்டில் 202 நாட்கள் நடைபெற வேண்டு மெனவும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. புதிய பாடசாலைத் தவணை அட்டவணை வருமாறு-

சிங்கள தமிழ்ப் பாடசாலைகள் முதலாம் தவணை இன்று முதல் ஏப்ரல் 08ஆம் திகதி வரையும் இரண்டாம் தவணை ஏப்ரல் 25ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் டிசம்பர் 9ஆம் திகதி வரையும், முஸ்லிம் பாட சாலைகள் முதலாம் தவணை இன்று முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரையும், இரண்டாம் தவணை ஏப்ரல் 18ஆம் திகதி முதல் ஜுலை 29ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் டிசம்பர் 9ஆம் திகதி வரையும் நடைபெறுமென அறிவித்துள்ளார்.

## மீளாய்வு செய்தவர்களுக்கே புதிய முத்திரை வழங்கப்படும்

(தொல்புரம்)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரண முத்திரை மீளாய்வு செய்யப்பட்டவர்களுக்கே இந்த வருடம் ஜனவரி முதல் புதிய முத்திரைகள் வழங்கப்படுமென பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது - கடந்த வருட இறுதிப் பகுதியில் பிரதேச செயலக அதிகாரிகளால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முத்திரைகள் மீளாய்வு செய்யும் பணிகள் நடைபெற்றதாகவும், இதன் மூலம் இந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட தகுதியான பயனுகரிகள் முத்திரைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முத்திரைகளை மீளாய்வு செய்யாமல் இன்னும் பலர் இருக்கின்றார்களெனவும், ஏனைய நிவாரணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் சமுர்த்தி நிவாரணத்திற்கு பலர் விண்ணப்பித்து வருவதாகவும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மீளக் குடியமர்ந்த பளை மக்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன

(பளை)

மீளக்குடியமர்ந்துள்ள பளைப் பிரதேச செயலக மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இந்தத் துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார்.

முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கே இவ்வாறு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், கிடைக்கின்ற உதவிகளை மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். துவிச்சக்கரவண்டிகள் உங்களின் அன்றாட வாழ்வின் ஒரு முக்கிய தேவையாக வுள்ளது. உதவிகள் கிடைக்கப்பெறாதவர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் வேறொரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தாமதமாக மீள் குடியேற்றப்பட்ட இப்பிரதேச மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு இணங்க



ஆளுநரால் இந்தத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. 132 துவிச்சக்கர வண்டிகள் இவ்வாறு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பளைப் பிரதேச செயலாளர் முகுந்தன், பளைப் பிரதேச வைத்திய அதிகாரி சி. மைதிலி, பளைப் பிரதேச செயலக திட்டதிடல் பணிப்பாளர் ஜெயக்குமார், பிரதேச சபைச் செயலாளர் சிவபிரகாசம் மற்றும் கிராம அலுவலர்கள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

# கைதடி முதியோர் இல்லத்திற்கு பஸ் வண்டி வழங்கப்படவுள்ளது

கைதடி அரச முதியோர் இல்லத்தின் பாவனைக்கென பஸ் வண்டி ஒன்று இந்த ஆண்டில் வழங்கப்படவுள்ளது.

இந்த பஸ் வண்டி கொள்வனவுக்கென வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இவ்வாண்டிற்குரிய நிதியிலிருந்து நிதி ஒதுக்கவுள்ளது.

இல்ல முதியோர்களின் பாவனைக்கென பஸ் வண்டி ஒன்றை தந்து உதவுமாறு இல்ல நிர்வாகம் ஏற்கனவே வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (18)

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 57 ஆசிரியர்கள் மீள் நியமனம்

(முல்லைத்தீவு)

துரித கல்வி அபிவிருத்தி அமுலாக்கல் திட்டத்தின் கீழ் கல்வி வாய்ப்பை இழந்த மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே கடமையாற்றிய ஆசிரியர்களில் 57 பேருக்கு மீண்டும் முல்லைத்தீவில் கடமையாற்றுவதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகளிலேயே இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும், யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் மேலும் 150 ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும் அவர்களும் விரைவில் முல்லைத்தீவுக்கு வந்துசேர்வார்கள் என்றும், நியமனம் பெற்றுக் கொண்ட 57 ஆசிரியர்களுடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவர்களின் சம்மதத்துடன் அவரவர்கள் விரும்பிய பாடசாலைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (வி)

# அதிக நூல்களைப் பயன்படுத்தி பரிசுபெற்ற மாணவருக்கு பரிசில்



(கொக்குவில்)

வலி தென்மேற்கு பிரதேச சபை ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் அந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலை அதிபர்களின் அனுசரணையுடன், மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையிலான சிறுவர் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட சிறுவர் கழகத்தில் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். இணைந்த சிறுவர் கழக அங்கத்தவர் களில் அதிக நூல்களைப் பயன்படுத்தி பயன்பெற்றோர், பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்கள் கடந்த விழயாழக் கிழமை மானிப்பாய் பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை, சிறுவர் கழகத்திற்கு அதிக மாணவர்களைச் சேர்க்க உதவிய ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அதிபர் திருமதி ந. சந்திரகுமார் பிரதேச சபை செயலாளரினால் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அதிக நூல்களைப் பயன்படுத்தி பயன்பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு, முதலாமிடம் தவராசா ஆதித்தன் (தரம் - 8), யாழ். ஆனைக்கோட்டை றோ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் சிவசுதன் நிறோயன் (தரம் - 5), யாழ். ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை, மூன்றாமிடம் சந்திரசேகர் கோபிகா (தரம் - 6), யாழ். ஆனைக்கோட்டை றோ.த.க. பாடசாலை, ஜெயசிங்கம் ஜனு (தரம் 6), யாழ். ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலை, உதயசேகர் நிவேதிகா (தரம் 5) யாழ். ஆனைக் கோட்டை அ.மி.த.க. பாடசாலை) (54)

# நவீன தொழில்நுட்பத்தை கிராம மட்டத்திற்கு விதாதா நிலையங்கள் எடுத்துச் செல்கின்றன

## உதவிப் பிரதேச செயலர் பாராட்டு

(தொல்புரம்)

**இன்றைய நவீன தொழில்நுட்பத்தை கிராம மட்டத்திற்கு எடுத்துச் செல்வதில் பிரதேச மட்ட விதாதாவள நிலையங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன என நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எம். எ. சோதிநாதன் தெரிவித்தார்.**

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கணனிப் பயிற்சி, ஸ்கிறின் பிரிண்டிங் பயிற்சி, கிறிஸ்டல் மூலம் பொருட்களை உருவாக்கும் பயிற்சிகளில் சித்தியடைந்த பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கந்தர்மடத்திலுள்ள விதாதா வள நிலையத்தின் தொழில்நுட்ப அலுவலர் தபேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட உதவி பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது,

சுயதொழிலில் ஈடுபடுவோர், விவசாய உற்பத்திகளில் ஈடுபடுவோர், பேக்கரி உற்பத்திகளில் ஈடுபடுவோருக்கு இங்கு பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. இதன் மூலம் பொருட்களின் உற்பத்தித் தரம், பாதுகாப்பு என்பன பேணப் படுவதற்கு தொழில்நுட்ப அறிவு இன்றியமையாத தாகும். தொழில்நுட்பம் பயன் படுத்தப் படாத பொருளை சந்தையில் போட்டித் தன்மை யில் விற்பனை செய்ய முடி யாது.

அதேபோலவே கணினி அறிவு இன்று எமது வெளிக்கள அலுவலர்களுக்குக்கூட பெருமளவு உதவி புரிகின்றது. சில கிராம அலுவலர்கள் தமது தரவுகளை கணினியில் பேணுவதால் வேலையை இலகுவாக்கிக் கொள்ள முடி கின்றது என்றார்.

மேற்படி நிகழ்வில் விதாதா நிலையத்தில் கணினிப் பயிற்சி களைப் பெற்றுக் கொண் சமுர்த்தி வெளிக்கள அலுவலர்களும் சான்றிதழ் களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், தலைமைப்பீட கிராம அலுவலர், உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர் என. சேதுவரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (26)

## சிற்றுண்டிகள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருமுறிகண்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் புது வருடப் பிறப்பான நேற்று முன் தினம் பயணிகளுக்கு காலைப் பொங்கல் பிரசாதத்தையும், மாலையில் தேனீர் மற்றும் சிற்றுண்டிகளும் வழங்கினர்.

நண்டதூர பயணத்தை மேற்கொண்டு திருமுறிகண்டியில் ஆறுதல் பெறும் வகையில் நின்ற தமக்கு இராணுத்தினர் வழங்கிய மேற்படி சிற்றுண்டிகள் களைப்பைச் சற்று தீர்த்ததாக பயணிகள் தெரிவித்தனர். (77)





**பல்கலைக்கழக நூலகத்தில் நடைபெற்ற முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசனின் "தொடரும் ஆன்மீகக் கல்விசார் பயணம்" நூல் வெளியீட்டு விழாவில், நூலின் முதற்பிரதியை பேராசிரியர் அ. சண்முகதாசிடமிருந்து பேராசிரியர் நித்தியகனகரத்தினம் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும், பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (54)**

## மாற்றத்திற்கு இடமில்லை

(நமது நிருபர்)

தற்போது நடைமுறைப் படுத்தப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் எந்தவிதமான மாற்றத்திற்கும் இடமில்லையென வடமாகாணக் கல்விப் பணி மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இடமாற்றங்கள் உரிய நடைமுறைகள் கடைப் பிடிக்கப்பட்டே செய்யப்பட்டுள்ளதாகவும், இடமாற்றம் சம்பந்தமாக முறைப்பாடு செய்திருந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்ட பின் அவர்களுக்குரிய பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், உரிய முறையில் முறைப்பாடு செய்தவர்களின் வீண்ணப்பங்கள் நிராகரிக கப்பட்டுள்ளதாகவும் குறித்த இடமாற்றத்தில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வி)

## தளபாடங்கள் வழங்கல்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கு கடந்த 31ஆம் திகதி தளபாடங்கள் வழங்கப் பட்டுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தினால் அங்குள்ள மாணவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாகவே முதல்கட்ட தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அங்குள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செயற்வதற்காக பத்து ஆசிரியர்களுக்கு இடமாற்றமும் வழங்கப்பட்டுள்ளது என வடமராட்சி வலயக் கல்வி வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. (12)

# அரசினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டத்தில் வறிய குடும்பங்கள் இணைக்கப்படுவதில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

(அச்சுவேலி)

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள வறிய குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் வட்டுத்திட்டத்தில் வீடற்ற வறிய குடும்பங்கள் பல இணைக்கப் படாது புறக்கணிக்கப்பட்டிருப்ப தாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் தெரிவிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வீட்டுத்திட்டத்தில் உண்மைநிலையை சரியாக அறிந்து அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும், இதனால் வீடற்ற தம்மைப்போன்ற பல வறிய குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருப்பதாகவும் வலிகிழக்குப் பகுதியில் உள்ள பலரும் மனஸ்தாபமடைந்துள்ளனர்.

இத்திட்டத்துடன் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் சரியான முறையில் பொதுமக்களை அணுகித் தகவல்களைத் திரட்டி, வீட்டுத்திட்ட உதவியினை வழங்கியிருந்தால் இத்தகைய பாதிப்பு நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது. அத்துடன், நீதியானதும் நியாய மானதுமான தெரிவும் இடம் பெற்றிருக்கும் எனவும் தெரிவிக்கின்றனர்.

தமது நிலைமைகளை எடுத்துக்கூறி தமக்கு வீட்டுத்திட்ட உதவி வழங்குமாறு தாம் பல முறை கிராம அதிகாரிகள் மற்றும் மேல் அதிகாரிகளிடம் கேட்டிருந்தபோதும், தமக்குரிய சந்தர்ப்பங்கள் தட்டிக் கழிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் தாம் மேற்கொண்டு எதனையும் செய்யமுடியாது இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் இனி வரும் காலங்களிலாவது அதிகாரிகள் நீதியான முறையில் செயற்பட்டு உண்மைநிலையைக் கருத்திற்கொண்டு, உதவி கிடைகக வேண்டியவர்களுக்கு உதவிகள் கிடைக்க வழி செய்யும் வகையில் நடுநிலைமையுடன் செயற்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். (03)

# மண்டைதீவு கண்டல் காடுகளில் வெளிநாட்டுப் பறவை இனங்கள்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து வரும் அரியவகை பறவை இனங்கள் யாழ்.மண்டைதீவு கண்டல் காடுகளிலும், வயல் நிலங்களிலும், தரவை வெளிகளிலும் பெருமளவில் கூட்டம் கூட்டமாக வந்து தமது பருவ காலத்தைக் கழித்து வருவதுடன், இனப் பெருக்கத்திலும் ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக கார்திகை, மார்கழி, தை மாதங்களில் மழையுடன் கூடிய ஈரலிப்பான சூழலில் இப்பறவையினங்கள் இப்படியான பகுதிகளை நாடி வருகின்றன.

அரியவகை நாரைகள், தாராக்கள், கொக்குகள், கடல் காகங்கள் போன்ற பறவை இனங்களே இப்பகுதிகளில் பெருமளவில் வந்து சேர்ந்துள்ளன.

இவை கடல் நீரேரிப் பகுதிகளில் உள்ள கண்ணா மரங்களில் கூடுகட்டி தமது இனப் பெருக்கத்தை மேற்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. அத்துடன், வயல் நிலங்களையும், தரவை நிலங்களையும் இவை தேடிச் செல்லும்போது பார்ப்பதற்கு அழகாக உள்ளது. (பா)

# காரைநகர் கடற்படையினரால் மேலும் இரு வீடுகள் கையளிப்பு

(காரைநகர்)

காரைநகர் எலாரா கடற்படையினர் தமது 55 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேறியுள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு பத்து வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதன்படி ஏற்கனவே நான்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அமைக்கப்பட்ட 5 ஆவது மற்றும் 6 ஆவது வீடுகள் அண்மையில் வறிய நிலையிலுள்ள இரண்டு குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன.

இந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வில் வடபிராந்திய கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.எம்.பி.வீரசேகர, காரைநகர் கடற்படைத் தளபதி கப்டன் எ.யு.சி. சில்வா, உதவி அரச அதிபர் ஜெயசீலன் மற்றும் கடற்படை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (50)

## கடை உடைத்து திருட்டு

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுச் சந்திப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாலுள்ள பலசரக்கு விற்பனை நிலையமொன்று கடந்த வியாழக்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

விற்பனை நிலையத்தின் பின்பக்க கதவை உடைத்தே இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றது. இது தொடர்பாக வவுனியா பொலிஸில் முறையிடப் பட்டுள்ளது. (எஸ்)

# வீதிகளின் அருகிலுள்ள "அதர்"களால் குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியம்

(அரியாலை)

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களால் ஸ்ரான்லி வீதியின் இருபக்கத்திலும் 'அதர்' வெட்டப்பட்டுள்ளதால், அந்தப் பகுதிக் குடியிருப்பாளர்கள் பெருத்த அவலத்திற்குள்ளாகி இருப்பதாகக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

தென்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட புள்டோசர் (பெக்கோ) இயந்திரத்தால் தோண்டப்பட்டுள்ள கான்கள் நீண்ட நாட்களாக நிரவப்படவில்லை. இதனால் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்கும் தொழில் இடங்களுக்கும் வாகனங்களைக் கொண்டு செல்வது தடைபபட்டுப் போயுள்ளது.

வீதியின் கிழக்குப் பகுதி இவ்வாறு இருக்க, ஆரியகுளம் சந்தியிலிருந்து இலங்கை வங்கி வரையான மேற்குப் பகுதியில் வீதியின் பாதிப்பகுதி அதாவது வடக்குப் பக்கம் மட்டும் 'காபெற்' முறையில் தார் இடப்பட்டுள்ளது. மறுபாதியான தென்பகுதி பழைய நிலையில் குழிகளுடன் காணப் படுகிறது.

வீதியின் அமைப்பில் ஒத்திசைவு இல்லாதிருப்பதுடன், ஒரு பக்கம் உயர்ந்தும் மறுபக்கம் தாழ்ந்தும் இருப்பதால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகியுள்ளது.

மேலும் காபெற் பகுதியால் செல்வது வாகனங்களுக்கு லேசாக இருப்பதால் அந்தப் பகுதியை மட்டும் பாவிப்பதற்காக அதில் ஏறி இறங்கி ஓடும் வாகனங்களாலும் விபத்துக்களைத் தடுப்பது கடினம்.

போக்குவரத்தும், வாகனங்களை நிறுத்துவதும் நெருக்கடியாக உள்ள இந்த வீதியில் சாதுரியமான முறையில் வீதித் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் தெரிவித்து வருகின்றனர். (23)

# நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு குழாய்மூல மலக்கழிவு அகற்றல்

(யாழ்ப்பாணம்)

நிலத்தடி நீரினைப் பாதுகாக்கும் முகமாகவும் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்கும் முகமாகவும், யாழ். நகர்ப்பகுதியில் மலசலக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளைக் குழாய் மூலமாக இணைத்து மேற்கொள்வதற்கு தேசிய நீர வழங்கல் வடிகால் அமைப்பு மற்றும் சுகாதாரத் திட்டப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். நகரில் அமைந்துள்ள நிறுவனங்கள், திணைக்களங்கள், விடுதிகள், வணிக நிலையங்கள் மற்றும் பொது அலுவலகங்கள், பாடசாலைகள் முதலியவற்றில் அமைக்கப்பட்டுள்ள கழிவறைகளுக்கு இக் குழாய் மூல இணைப்பு வழங்கப்பட இருப்பதாகவும் அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

இவ்வாறு குழாய் மூலமாக எடுத்துவரப்படும் கழிவுகள் காக்கைதீவுப் பகுதியில் அமைகப்படும் பாரிய நிலத்தடிக் குழியில் கொண்டு செல்லப்பட்டு, இறக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பா)



கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அறக்கொடை நிதியத்தினால் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு அறக்கொடை நிதியத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவினால் காலணிகள், கல்வி கற்றல் உபகரணங்கள் கொண்ட பொதிகளை மாணவி ஒருவருக்கு வழங்குவதைக் காணலாம். (08)

# வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி

(தொல்புரம்)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று சமுர்த்தி வங்கிகளில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான அடிப்படை கணினிப் பயிற்சி நெறி ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் 20 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது வங்கிகளால் கற்கைநெறியைப் பயில்வதற்கான மாணவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளைப் பிரதேச செயலக அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இப்பயிற்சி நெறிகள் யாவும் பிரதேச செயலகத்தால் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சமுர்த்தி செயலணிகள், சமுர்த்தி வங்கிகளுடன் இணைந்து செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (26)

## இன்றைய பலன்

03.01.2011 திங்கட்கிழமை

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 19 ராகுகாலம் 8.00 –9.30, சுபநேரம் 12.30 – 2.00, மூலம் பி.இ. 3.30 வரை, சதுர்த்தசி பி.ப 3.00 வரை, சித்தம் போதான அமாவாசை.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

**மேடம்:** நினைத்த காரியம் சித்தி, பாராட்டப்படல், மதிப்பு உயர்வு.

**ரிஷபம்:** நண்பர் விரோதம், காரியத் தடை, விதண்டாவாதம்.

**மிதுனம் :**பெரியோர் உதவி, காரிய சித்தி, வழக்கில் வெற்றி.

**கடகம்:** ஆலய வழிபாடு, தானதர்ம விருப்பம், பெரியோர் உதவி.

**சிம்மம்:** சோம்பலால் கேடு, காரியத்தடை, அவமானப்படல்.

**கன்னி :** போசனசுகம், முயற்சியில் வெற்றி, ஆரோக்கியம்.

**துலாம் :** போட்டியில் வெற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி, பெரியோர் உதவி

**விருச்சிகம்:** அகால போசனம், காரிய அலைச்சல், மனத்துக்கம்.

**தனுசு :** ஆலய வழிபாடு, உறவினர் வருகை, பொருட்சேர்க்கை.


**மகரம் :** போட்டிகளில் வெற்றி, நினைத்த காரியச்சித்தி, மகிழ்ச்சி.

**கும்பம் :** தேகநலன் பாதிப்பு, பணத் தட்டுப்பாடு, விதண்டாவாதம்.

**மீனம்:** தேகநலன் விருத்தி, நண்பர் சேர்க்கை, சுபச்செலவு.

# ஆன் சான் சூகியை விடவும் மோசமாக சரத்பொன்சேகா நடத்தப்படுகிறாராம்

## என்கிறார் கருஜெயசூரிய



(கொழும்பு)

***மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆன் சான் சூகியை விடவும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா மோசமாக நடத்தப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.***

மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களை விடவும், அரசாங்கம் சரத் பொன்சேகாவை மோசமாக நடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் சரத் பொன்சேகா போராடி வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மியன்மார் ஆட்சியாளர்கள் ஆன் சான் சூகியை வீட்டுக் காவலில் தடுத்து வைத்ததாகவும், இலங்கை அரசாங்கம் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா சிறையில் வாடி வருவதாக அவர் தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவிற்கு உரிய மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இந்தப் புத்தாண்டிலேனும் சரத் பென்சேகாவை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்

# விமானப்படை 60ஆவது ஆண்டு நிறைவில் இந்திய, பாகிஸ்தானிய படை அதிகாரிகள்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய மற்றும் பாகிஸ்தானிய படையதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இந்தியாவின் விமானப்படை தளபதி, சீப் மார்சல் பிரதீப் வசந்த் நாயக் எதிர்வரும் 16 ஆம் திகதி ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

கடந்த வருட இறுதிப்பகுதியில் இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படை தளபதி அட்மிரல் நிமல்குமார் வர்மா இலங்கை வந்திருந்தார். இதேவேளை, பாகிஸ்தானிய இராணுவத்தின் தலைமையதிகாரி ஜெனரல் ஆஸ்பாக் கயானி எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இவரின் விஜயம் கடந்த வருடம் இலங்கைக்கு சென்ற பாகிஸ்தானிய ஜனாதிபதி ஆசிப் அல் சர்தாரியின் விஜயத்தின் பின்னரான தொடர்ச்சியாகவே இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியா - இலங்கை இடையே கடலுக்கு அடியே மின்கேபிள்

(கொழும்பு)


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே முதன்முறையாக கடலுக்கு அடியில் மின் பரிமாற்றத்திற்கான கேபிள் களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடலுக்கு அடியில் மின் பரிமாற்ற கேபிள் களை இந்திய மின் தொகுப்பு கழக நிறுவனமும் (பவர் கிரிட்) இலங்கையின் சிலோன் மின்சார வாரியமும் (சி.இ.பி) இணைந்து அமைக்க திட்டமிட்டுள்ளன. இதற்கான விரிவான திட்ட அறிக்கையை (டி.பி.ஆர்) இந்தியா மின்தொகுப்புக் கழகம் இன்னும் ஒரு மாதத்தில் மத்திய அரசிடம் சமர்ப்பிக்க உள்ளது.

இந்திய மின் தொருப்புக் கழகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் இதுபற்றி கூறிய தாவது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 250 முதல் 300 கி.மீ.நீளத்திற்கு மின்பரிமாற்ற கேபிள் வயர்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 50 கி.மீ நீளம் கடலுக்கு அடியில் அமையவுள்ளது கடலுக்கு அடியில் அமையும் கேபிள் திட்டத்தை இந்திய மின் தொகுப்புக் கழகமும், சிலோன் மின்சார வாரியமும் இணைந்து மேற்கொள்ளும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை இன்னும் ஒரு மாதத்தில் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும். இந்த திட்டப் பணிகள் 2014ஆம் ஆண்டில் தொடங்கும். இந்த திட்டத்திற்காக 3,000 முதல் 4,000 கோடி வரை தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 12ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முடிவில் ஆயிரம் மெகாவாட் மின்சாரம் இந்த கேபிள் மூலம் பரிமாற்றம் செய்யப்படும் தமிழகத்தின் ராமேஸ்வரத்திலிருந்து. இலங்கையின் தலைமன்னார் வரை இந்த கேபிள்கள் அமைக்கப்பட்ட திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் இந்த திட்டத்திற்கான இறுதித் தகத்தை மத்திய அரசு முடிவு செய்யும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடலுக்கு அடியில் மின் கேபிள்கள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையை பின்பற்றி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடலுக்கு அடியில் கேபிள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய மின் தொகுப்புக் கழகம் ஏற்கனவே இது போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது பூடான் இடையேயான திட்டம் செயல் வடிவத்தில் உள்ளது. வங்க தேசம் இடையேயான திட்டப் பணிகள் நடந்துவருகின்றன. எனினும் இலங்கை இடையேயான திட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த திட்டம் குறித்து சிலோன் மின்சார வாரியத் தலைவர் வித்ய அமரபாலா கூறியதாவது, இந்தியாவுக்கும்,இலங்கைக்கும் இடையில் கடலுக்கு அடியில் மின்பகிர்மான கேபிள்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான திட்டப் பணிகள் விரைவில் தொடங்கும். எந்த திகதியில் தொடங்கும் என்பதை திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு அரசின் அனுமதி கிடைத்ததும் அறிவிக்கப்படும். இவ்வாறு வித்ய அமரபாலா கூறினார்.

# ஊள்ளூராட்சி தேர்தலில் போட்டி இறுதிதீர்மானம் நாளை எடுக்கப்படும்



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது குறித்த இறுதித்தீர்மானம் நாளை செவ்வாய்க் கிழமை கூடும் கட்சியின் உயர்மட்ட கூட்டத்தின் பின்னர் முடிவு செய்யப்படுமென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடகிழக்கிலுள்ள மட்டக்களப்பு,யாழ்ப்பாணம்,கல்முனை மாநகர சபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நிச்சயம் போட்டியிடும் எனத்தெரிவித்த அவர், தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, வேட்பாளர் தெரிவு,வேறு கட்சிகளுடன் இணைந்தா, தனித்தா போட்டியிடுவது,மேயர், தவிசாளர் வேட்பாளர்கள் நியமனம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருட்களின் விலைகள் அதிகரித்தாலும் தேர்தல்களில் எமக்குத் தோல்வி இல்லை



(கொழும்பு)

நாட்டில் தற்போது பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டாலும் நடைபெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியடைய மாட்டாதென அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.


எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாரிய வெற்றியீட்டுமென நான் நம்பிக்கையுடன் உள்ளேன்.

ஒவ்வொரு கட்சிக்குமென ஒவ்வொரு கொள்கை உள்ளது. நாட்டின் ஜனநாயகத்தின் வெளிப்பாடே அது வாகும். எனவே தற்போதுள்ள சவாலை எதிர்கொண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வெற்றி கொள்வதற்கு எமது கூட்டமைப்பு தற்பொழுது தயாராகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேல்தலுக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை தமது கட்சி மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மாவட்ட மட்டத்தில் வேட்புமனு கோருவதற்கு எமது கட்சி தயாராகி வருகின்றது. இந்தத் தேர்தலுக்காக பலம் வாய்ந்த பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதே எமது நோக்கமாகும் இதற்கென கட்சியின் உயர்மட்டம் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போர்க்குற்ற சர்வதேச நீதிமன்றில் முன்னாள் நீதியரசர் நியமனம்

(கொழும்பு)

ஐ.நா. சபையின் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையர் ஒருவர் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



பிரித்தானியாவில் இலங்கைக்கான தூதுவராக இருக்கும் முன்னாள் நீதியரசர் நிஹால் ஜயசிங்கவே அவ்வாறு நியமிக்கப்படவுள்ளார் என அத்தகவல் வட்டாரங்கள் மேலும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் அலுவலகத்தி லிருந்து அவருக்கான பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கம்போடியாவின் (காம்போஜ) போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் நீதிமன்றத்தின் நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 31ஆம் திகதியுடன் தூதுவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டுள்ள நிஹால் ஜயசிங்க, இன்னும் இரண்டொரு வாரங்களில் தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



தாய்லாந்தில் நடைபெற்ற கண்காட்சி ரென்னிஸ் போட்டியின் இடைவேளையின் போது பெல்ஜியத்தில் கிம் கிளைஸ்டர்ஸ் மற்றும் டென்மார்க்கின் கரோலின் வொஸ்னியாக்கி அமர்ந்திருப்பதைக் காணலாம். இப்போட்டியில் கிம் கிளைஸ்டர்ஸ் வெற்றிபெற்றார். இப்போட்டி நேற்று நடைபெற்றது.


# தோல்வியின் பிடியிலிருந்து அவுஸ்ரேலியா மீண்டெழும்

(சிட்னி)

தோல்வியின் பிடியிலிருந்து விரைவில் அவுஸ்ரேலிய அணி எழுச்சி பெற்றுவிடும் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாக அவுஸ்ரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ரா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,


அவுஸ்ரேலிய அணியின் முழுநேர பந்து வீச்சுப் பயிற்சியாளராகும் எண்ணம் தற்போதைக்கு கிடையாது. ஆனால் தேவைப்படும் பட்சத்தில் பந்து வீச்சுக் குறித்த ஆலோசனை வழங்க தயாராக உள்ளேன். எனது முதல் மனைவி ஜானியின் பெயரில் உள்ள அறக்கட்டளை தொடர்பாக நிறைய நிகழ்ச்சிகளில் பங்கேற்க இருப்பதால், முழுநேர பந்து வீச்சுப் பயிற்சியாளராக பணியாற்ற வாய்ப்பு இல்லை.

தற்போதுள்ள அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து 13 டெஸ்ட் போட்டியில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. இதனால் தோல்வியின் பிடியிலிருந்து விரைவில்



எழுச்சி பெற்றுவிடும் என நம்புகிறேன். அவுஸ்ரேலிய அணியில் திறமையான இளம் வீரர்களின் வருகை மகிழ்ச்சி அளிக்கிறது. நாளை தொடங்கும் சிட்னி டெஸ்டில் அறிமுக வீரராக களமிறங்க உள்ள உஸ்மான் கவாஜா, நிச்சயம் சாதிப்பார் என எதிர்பார்க்கிறேன்.

## தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் வாய்ப்புப்பெறும் பாகிஸ்தான் வீரர்!



பாகிஸ்தானில் பிறந்த 31 வயதான சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தஹிருக்கு தென்னாபிரிக்க அணியில் விளையாடும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் உள்ளூர் போட்டிகளில் விக்கெட்டுக்களை கைப்பற்றிவரும் இவர், 127 முதல்தரப் போட்டிகளில் 535 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

தென்னாபிரிக்க குடியுரிமையும் அவருக்குக் கிடைத்துவிட்டது. அத்துடன் தென்னாபிரிக்காவுக்காக விளையாடும் தகுதியையும் அவர் பெற்றுவிட்டார்.

அநேகமாக இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் இம்ரான் தஹிர் களமிறக்கப்பட அதிக வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல் நிலை வீரருக்கான முழுத் தகுதியும் உள்ளது




(பாங்கொங்)

ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் நிலை வீராங்கனையாக இருப்பதற்குரிய அனைத்து தகுதிகளும் என்னிடம் உள்ளது என டென்மார்கின் கரோலின் வொஸ்னியாக்கி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இதுவரை ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் கூட வென்றதில்லை என்றதொரு கேள்வி ரசிகர்கள், விமர்சகர்கள் மத்தியில் இருக்கலாம். இந்நிலையில் முதலிடத்தில் நான் இருப்பதற்கு தகுதியானவரா என்ற கேள்வி கூட உங்களிடம் எழலாம்.

கிராண்ட்ஸ்லாம் மகுடம் சூட வேண்டும் என்பது எனது சிறு வயதுக் கனவு. இருப்பினும் கிராண்ட்ஸ்லாம் போன்ற பெரிய பட்டங்கள் எதுவும் வெல்லாவிட்டாலும், தரப்படுத்தலில் முதல் நிலை இடத்திற்கு நான் தகுதியானவள்தான். 2010ஆம் ஆண்டில் நான் சிறப்பாக விளையாடி ஆறு பட்டங்களைக் கைப்பற்றியுள்ளேன். இந்த வருடம் கடந்த ஆண்டைவிட சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். எனது சிறு வயதுக் கனவுகூட இந்த ஆண்டில் நனவாகும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகவே நான் உணர்கின்றேன் என்றார்.

# சகீர், முகமெட் ஆசிப் ஆகியோரிடம் பந்து வீச்சு நுணுக்கத்தை கற்றேன்!



(சிட்னி)

சகீர்கான் மற்றும் முகமெது ஆசிப் ஆகியோரி டமிருந்து பந்து வீச்சு நுணுக்கத்தை நான் கற்றுக் கொண்டேன் என இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

2008ஆம் ஆண்டு நாங்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடினோம். அப்போது சகீர்கானிடம் இருந்து பந்து வீச்சில் சில நுணுக்கங்களை தெரிந்து கொண்டேன். அவர் பந்தை சுவிங் செய்வதில் சிறப்பாக செயற்பட்டார். பந்து எப்படி சுவிங் ஆகிறது என்பதை துடுப்பாட்ட வீரர்களுக்குத் தெரியாத வகையில் அவர் வீசுகிறார். சகீர்கானிடம் இருந்து இந்த நுணுக்கத்தை நான் கற்றுக்கொண்டேன். இது எனக்கு உதவியாக இருந்தது.

இதேபோல பல்வேறு சர்வதேச வீரர்களிடம் இருந்து பந்துவீச்சு பற்றிய நுணுக்கம் கற்று இருக்கிறேன். பாகிஸ்தான் வீரர் முகமது ஆசிப்பிடம் இருந்தும் சில நுணுக்கம் கற்று இருக்கிறேன்.

தற்போது நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிக்க அண்டர்சனின் பந்து வீச்சே முக்கிய காரணமாகும். இது வரை நடைபெற்ற நான்கு போட்டிகளில் அவர் 17 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

# ஒருங்கிணைந்த செயற்பாடு இன்மையே ரி-20 போட்டித்தொடரை இழக்க காரணம்

(இஸ்லாமாபாத்)

வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்படாதமை மற்றும் சிறந்த தலைமைத்துவம் இல்லாமை காரணமாகவே பாகிஸ்தான் அணி ரி-20 போட்டித் தொடரை இழந்தது. இவ்வாறு தொடர்ந்தால் டெஸ்ட், ஒரு நாள் தொடரையும் இழக்க வேண்டி வரும் என பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

நியூசிலாந்துடனான ரி-20 தொடரை இழந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அக்ரம் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரை பாகிஸ்தான் அணி இழந்தது



வருத்தம் அளிக்கிறது. இதற்கு பாகிஸ்தான் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்படாததே காரணம். சமீபகாலமாக பாகிஸ்தான் அணி சிறந்த தலைவர் இல்லாமல் தவித்து வருகிறது. இத்தொடரில் அப்ரிடி, தலைவர் பொறுப்பில் சிறப்பாக செயற்படவில்லை. இதேபோல வீரர்களும், தங்கள் பொறுப்புணர்ந்து விளையாடவில்லை. தொடர்ந்து இது போல செயல்பட்டால், டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை மோசமாக இழக்க நேரிடும். ஆசிப், ஆமிர் உள்ளிட்ட வேகப் பந்துவீச்சாளர்கள் இல்லாமல் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு படுமந்தமாக உள்ளது. உலக கோப்பை தொடர் நெருங்கும் வேளையில் பாகிஸ்தான் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கவில்லை. உலக கிண்ணத் தொடருக்கு புதிய தலைவர் தெரிவு செய்வது தவறான முடிவு. ஏனெனில் தலைவர் பொறுப்பை யாருக்கும் எளிதில் வழங்கிவிட முடியாது. அதற்கு சற்று கால அவகாசம் தேவைப்படும்.

## பங்களாதேஷ் தலைவராக ஷகிப் அல் ஹசன் நியமனம்




(டாக்கா)

உலகக் கிண்ணப் போட்டிக்கான பங்களாதேஷ் அணித் தலைவராக சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசனை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

மோர்தாசா காயத்தால் அவதிப்பட்டதால் தற்காலிகத் தலைவர் பதவியை ஏற்ற அல் ஹசன் சிறப்பாக செயற்பட்டதாகவும், நியூசிலாந்து, சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் அணி கைப்பற்ற அல் ஹசனின் தலைமைத்துவமே காரணமெனவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேற்படி போட்டிகளில் அணியை சிறப்பாக வழி நடத்தியதன் காரணமாக இந்த கௌரவத்தை நாங்கள் வழங்கியுள்ளோம் என்றும் மேற்படி சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, துணைத் தலைவராக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தம்பிக் இக்பால் தெரிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது

# கேப்டவுன் டெஸ்ட் மழையால் இடையிடையே தடங்கல்


(கேப்டவுன்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று கேப்டவுன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அம்லா 59, பீற்றர்சன் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மற்றும் கலிஸ் 22, டி. வில்லியர்ஸ் 14 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். பந்து வீச்சில் சகீர்கான், ஸ்ரீசாந், சர்மா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இதேவேளை, நேற்றைய போட்டியில் இடையிடையே பெய்த மழை காரணமாக போட்டி தடைப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, நிறைவடைந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பனிபடர்ந்திருந்த விமானத் தளத்தினால் பயணிகள் விமானம் வெடித்துச்சிதறியது



(மொஸ்கோ)

விமானத் தளத்தில் பனி படர்ந்து காணப்பட்டதனால் ரஷ்யாவின் பயணிகள் விமானம் தரையிறங்கும் வேளை ஓடு தளத்தை விட்டு விலகி வெடித்துச் சிதறியதில் மூன்று பயணிகள் உயிரிழந்ததுடன், 43 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது-

ரஷ்யாவின் 'கோகலி மாவியா ஏர்லைன்' என்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் சைபீரியாவின் சேர்கட் நகர் விமான நிலையத்தில் இருந்து மொஸ்கோவுக்குப் நேற்றுமுன் தினம் புறபபட்டது. அதில் 124 பயணிகள் இருந்தனர். விமானம் புறப்பட்ட சில வினாடிகளில் மீண்டும் தரை இறங்கியது.

அப்போது சைபீரியாவின் சேர்கட் விமான நிலையத்தின் ஓடுதளத்தில் பனி படர்ந்து கிடந்தது. இதனால் நிலை குலைந்த விமானம் ஓடுதளத்தைவிட்டு விலகி ஓடி வெடித்துச் சிதறியது.

இதனால் சுமார் 1000 சதுர அடி அளவுக்குப் பந்து போல விமானம் தீப்பிடித்து எரிந்தது. முன்னதாக விமானம் தரையில் விழுந்து ஓடு தளத்தில் ஓடி வெடிக்கும் முன்பே மீட்புப் படையினர் விரைந்து வந்தனர்.

தீவிரமாக மீட்புப் பணியில் ஈடுபட்டு விமானத்தில் இருநத பெரும்பாலான பயணிகளை மீட்டனர். ஆனால் மூவர் மட்டும் உயிரிழந்ததுடன் மேலும் 43 பயணிகள் காயமடைந்தனர். இவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.


இவர்களின் உடலின் பெரும்பாலான பாகங்கள் தீயில் எரிந்து கருகியுள்ளன. இவர்கள் தவிர 4 பேருக்கு எலும்பு முறிவும், காயங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த விபத்துக்கு விமான இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே காரணம் எனக் கூறப்படுகிறது. விமானம் புறப்பட்டு விண்ணுக்குச் செல்லும் போது ஒரு இயந்திரம் திடீரென வேலை செய்யாமல் பழுதாகிவிட்டது. இதனால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என அவசரகாலச் சேவைப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் வாடிம் கிரேபெனிகோவ் தெரிவித்தார்.

இதற்கிடையே அமெரிக்காவின் விர்ஜீனியா மாகாணத்தில் வேயர்ஸ் கேவ் என்ற இடத்தில் நடுவானில் சென்ற போது விமானமும், ஹெலிகொப்டரும் ஒன்றையொன்று மோதிக் கொண்டன.

இதில் அவை இரண்டும் தரையில் விழுந்து நொருங்கியதில் இருவர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆளில்லா விமானத் தாக்குதலில் தலிபான்களின் தளபதி உயிரிழப்பு



(பெஷாவர்)

பாகிஸ்தானில் வடமேற்குப் பகுதியில் அமெரிக்கப் படையினரின் ஆளில்லா விமானம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், தலிபான்களின் முன்னணித் தளபதியான குயாரி ஹுசைன் மசூத் கொல்லப்பட்டார்.

கடந்த ஒக்டோபர் மாதத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பாகிஸ்தானின் கைபர்-பக்துன்கவா மாகாணத் தகவல் துறை அமைச்சர் மியான் இப்திகார் ஹுசைன் தெரிவித்தார்.

எனினும், தமது தளபதி கொல்லப்பட்ட தகவலைப் பாகிஸ்தானிலுள்ள தலிபான்கள் உறுதிப்படுத்தவில்லை. கொல்லப்பட்ட தலிபான் தளபதி, பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் தற்கொலைத் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து வந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாகிஸ்தானின் லாகூர் மற்றும் குவெட்டா நகரில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஷியா முஸ்லிம்கள் நடத்திய ஊர்வலத்தில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கலிபோர்னிய ஆளுநர் சுவாசினேகர் இன்று பணியிலிருந்து விலகுகின்றார்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாணத்தின் ஆளுநராகவுள்ள பிரபல ஹொலிவூட் நடிகர் ஆர்னல்ட் சுவாசினேகர் (வயது 69) இன்று தனது பதவிக்காலம் முடிவடைந்து பதவி விலகுகிறார்.

பதவி விலகுவதைத் தொடர்ந்து கடந்த மாதம் சாக்ராமென்டோ என்ற இடத்தில் உள்ள தனது வீட்டில் பிரிவுபசார விழா விருந்து வைத்தார். அதில் அவரது நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலநது கொண்டனர். அவர்களிடம் பேசிய அவர், எதிர்கால அரசியல் திட்டம் எதுவும் தன்னிடம் இல்லை என்று தெரிவித்தார். ஆனால் அவர் மீண்டும் சினிமாவில் நடிக்கத் திட்டமிட்டுள்ளார்.

ஆளுநராகப் பதவியில் இருந்து விலகும் ஆர்னல்டுக்கு வெளிநாடுகள் அழைப்பு விடுத்துள்ளன. சினிமாவில் ஹீரோ ஆக நடிக்கும் அவர்களது படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென இங்கிலாந்து ராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.

ரஷ்யாவும் அவரைத் தங்கள், நாட்டுக்கு வரும்படி அழைத்துள்ளது. அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவதாகத் தெரிவித்துள்ளது.

# இன்புளுவென்சா H1N1 (Influenza Hini)

## பன்றிக் காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி

இன்புளுவென்சா HINI என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும் போதும் வெளியேறும் கிருமிகள் மூலம் தொற்றுகின்றது. இந்த நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது 'பன்றிக் காய்ச்சல்' என்றழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய் ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்நோய்க்கான எதிர்ப்பு சக்தியை கொண்டிருப்பதில்லை. ஆகவே இந்நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாகப் பரவுகின்றது.

*குணங்குறிகள்*

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை

*பொதுவான குணங்குறிகளாவன.*

1. காய்ச்சல்
2. தலையிடி
3. உடல் வலி
4. தொண்டை வலி
5. இருமல்
6. மூக்கிலிருந்து சளி வடிதல்
7. சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

இது சாதாரண தடிமன் போன்றது ஆகவே மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்நோய் சில நோயாளிகளிலிருந்து நியூமோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சு விடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடுங்காய்ச்சலாக காணப்படக்கூடும் அல்லது காய்ச்சல் காணப்பட்டாலும் நோய் கடுமையாகும்.

மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்படவேண்டியவை

1. குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல்
2. சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல். இது நோய் பரவுதலைத் தடுக்கும்.
3. போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல்
4. குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல். சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் முதலியன தேவையில்லை.
5. சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல்
6. தும்மும் போதும், இருமும் போதும் கைக் குட்டையை உபயோகித்தல், பேப்பர் ரிசு (Tissue) உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்கக் கூடாது. கைகளில் மூலம் மற்றைய இடங்களை தொடும்போது இவ்வைரஸ் மற்றைய இடங்களுக்கு பரவக்கூடும்.
7. அரிதாக சிலரில் இந்நோய் முற்றி நியூமோனியாவாக மாறக்கூடும் அல்லது வலிப்பு ஏற்படக்கூடும். மேலும் தடுமாற்றம், மாறுபட்ட விழிப்புணர்வு, ஏற்படக்கூடும்.

கீழ்க் காணப்படும் குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

a. கடுங்காய்ச்சல்
b. மூச்சுவிடுதல் கடினமாதல்
c. மாறுபட்ட விழிப்புணர்வு
d. குணங்குறிகளின் கடுமை அதிகரித்தல்
e. உடல் சோர்வு

*இந்நோய்க்கு சிகிச்சை உண்டா?*

இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிகளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே எல்லோரும் பதற்றப் படவோ வைத்திய சோதனைகள் செய்ய வேண்டிய அவசியமோ இல்லை. இந்நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ள தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே இதைக் குறித்து கவலைய்டையத் தேவையில்லை.

*அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?*

கடுமையாக நோய் வாய்ப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளவர்கள்.

- 2 வயதிற்கு உட்பட்டவர்கள்
- 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- கர்ப்பிணிகள்

நீரிழிவு, ஆஸ்மா, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளவர்கள் பிரட்னிசலோன் (Prednosolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

ஆகவே நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

*இந்நோயிலிருந்து பாதுகாப்பு எப்படி*

1. சன நெருக்கடி மிகுந்த இடங்களை தவிர்த்தல்
2. சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல்
3. வாய் மற்றும் மூக்கு பகுதிகளை தேவையின்றி தொடுவதை தவிர்த்தல்
4. மூக்கால் நீர் / சளி வடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்தது 1 மீற்றர் தூரம் தள்ளி நிற்றல்
5. வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஜன்னல்களை திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்தல்.
6. Mask உபயோகிப்பின் மூக்கையும் வாயையும் மூடக் கூடியதாக சரியான முறையில் அணியப்பட வேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும்.

நோய் தொற்றுதலை தவிர்க்க ஒரு சுகதேகி Mask அணிவதை பார்க்கிலும் நோயாளி நோய பரவுதலை தடுக்க Mask அணிவது சிறந்தது.

Dr. தெய்வேந்திரன் (எம்.பி.பி.எஸ்)

# புதுவருடம் தமிழகத்திற்கு தேர்தல் ஆண்டு தொண்டர்கள் மகிழ்ச்சி, தலைவர்கள் பதட்டம்

(புதுடெல்லி)

**பிறந்துள்ள 2011ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் ஆண்டாக இருப்பதால், அரசியல் வட்டாரம் சுறுசுறுப்பாகிக் கொண்டு வருகிறது. மே மாதம் தொடக்கத்தில் அல்லது ஏப்ரல் இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

தேர்தல் துவங்கியதுமே ஆர்ப்பரிக்கும் தலைவர்கள் மத்தியில் இந்தத் தேர்தல் ஒரு வித பதற்றத்தினைக் கொண்டு வந்துள்ளது போல் தெரிகிறது. காரணம் இன்றைய ஸ்பெக்ட்ரம் ஊழல் முதல் முந்தைய ஆட்சியின் பட்டினி ஊழல் வரை மக்கள் மத்தியில் பிட்டுப் பிட்டு வைக்கப்படுகின்றது.

வெற்றி பெற்றால் மட்டுமே தாம் செய்த ஏனைய ஊழல் பதிவுகளையும் மறைக்க முடியும் என்ற நிலை இன்றைய தலைவர்கள் மத்தியில் மூச்சடைப்பாகவே இருக்கின்றது. மேலும், சி.பி.ஜ. போன்ற ஜாம் பாவான்களை எதிர் கொள்ளவதும் தற்போது தர்ம சங்கடமாகி வருகின்றது.

இந்த முறை கூட்டணிகளும் கூட குழறுலாம் என்ற வாச கங்கள் பீதியைக் கிளப்பியுள்ளன. சில கட்சிகள் இன்ன மும் கூட்டணி சரியாக அமைய வில்லையே என்கின்ற ஏக்கத்தில், அமைந்தவர்களோ தொகுதி பங்கீட்டுச் சிக்கலில்.

மக்கள் மனதோ செல லொணப் புழுகத்தில்.சென்சுரி அடித்தாலும் கை தட்டுவர். சுழியடித்தாலும் கை தட்டுவர். ஓட்டுப் போட்டால் துட்டு நிச்சயம் என்ற கணக்கிலேயே ஆர வாரப்பேச்சுகள் நிலவுகின்றது. கேட்டால் அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா என்கிற டையலாக். மேலும் இதுதான் வழியென்று எம்.எல்.ஏ-வை மறித்துக் கொண்டு, தேவை களை நிறைவேற்றச் சொல்லி போராட்டம் செய்ய வேண்டும் இருக்கத்தான் செய்கியார்கள். அதேவேளை எத்தனை முறை கொடுத்தாலும் நாங்கள் போகிற போக்கில் போவோம் என்கிற பொழுது போக்குதனம் இன்னமும் மாறவில்லை. நியாய விலைக் கடையில் நின்று கொண்டு அரிசி தர வில்லையெனப் போராடும் மக்கள் தமது வாகனத்திற்கு பெற்றோலை மட்டும் மாற்று வழியில் வாங்குவது எவ்விதம் பொருந்தும்.

அரசாங்கத்தை மட்டும் குற்றம் சொல்லும் மக்கள் தங்கள் அற்ப ஆசைகளையும் சேர்த்துக் குறைக்கவேண்டும் அப்போது தான் தேர்தலும் வெல்லும், ஜனநாயகமும் வெல்லும். இது ஒரு ஜனநாயக வாதியின் ஆதங்கம்.

## தொகுதிப் பங்கீட்டுக் குழுக்கள் அமைத்துள்ளார் ஜெயலலிதா



(சென்னை)

சட்டமன்றத் தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ளதால் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச வதற்காக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குழுக்கள் அமைக்க உத்தரவிட்டுள்ளார்.

தற்போது அதிமுக கூட்டணியில் இரு கம்யூனிஸ்டுகள், மதிமுக, ம.ம.க போன்ற கட்சிகள் உள்ளன. இந்தக் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறக் கூடும் இந்நிலையில் தமிழகம், புதுவை மற்றும் கேரள மாநில சட்டமன்றத் தேர்தல்களில் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அ.தி.மு.க.வில் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நடைபெற உள்ள தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தல்களில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அ.தி.மு.க. சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு தமிழக தொகுதிகளில் பங்கீடு பற்றிப் பேச அ.தி.மு.க. பொருளாளர் ஓ.பன்னீர்செல்வம், தலைமை நிலைய செயலாளர் செங்கோட்டையன், தேர்தல் பிரிவு செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி சட்டமன்ற பேரவை தொகுதி பங்கீடு குறித்து பேச அ.தி.மு.க. கொள்கைபரப்பு செயலாளர் தம்பித்துரை, அமைப்பு செயலாளர் செம்மலை ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கேரள மாநில சட்டமன்ற தேர்தல் தொகுதி பங்கீடு குறித்து பேச தேர்தல் பிரிவு இணைச் செயலாளர் பாலகங்கா, மருத்துவ அணி தலைவர் டாக்டர் மைத்ரேயன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதற்கிடையே மூன்று மாநில தேர்தல் பணிகள் குறித்த உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னை போயஸ்கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக் கிழமை மாலை நடைபெற்றது.

## தொலைத்தொடர்புத்துறைக்கு வகுக்கப்படும் புதிய கொள்கை

(புதுடெல்லி)

தொலைத் தொடர்புத் துறையின் செயல்பாடுகள் வெளிப் படையாக இருக்கும் வகையில் விரைவில் "தேசிய தொலைத் தொடர்புக் கொள்கை 2011" என்றபெயரில் புதிய தொலைத் தொடர்புக் கொள்கை உருவாக் கப்படும் என்று மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் கபில் சிபல் கூறியுள்ளார். இந்தக் கொள்கை தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருக்கும் என்றும் தொலைத் தொடர்புத் துறையின் 100 நாள் செயல் திட்டங்களை டில்லியில் வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் தெரிவித்தார்.


முன்னைய தேசிய தொலைத் தொடர்புக் கொள்கை 1999 உருவாக்கப்பட்டு 11 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதற்குப்பின் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே, தேசிய தொலைத் தொடர்புக் கொள்கை 2011 என்ற பெயரில் புதிய கொள்கை உருவாக்கப் படும் என்று கூறினார் அமைச்சர் கபில் சிபல்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் அரசுக்குப் பெருமளவில் வருமான இழப்பை அளித்ததாகக் கூறப்படும், "முதலில் வந்தவருக்கே முதலில் சேவை" என்ற முன்னைய 99இன் கொள்கையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படுமா என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

அரசுக்கு ஓரளவு வருவாய், உபயோகிப்பாளர்களுக்கு குறைந்த விலை மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சி ஆகிய மூன்று அம்சங்களையும் கருத்தில் கொண்டு புதிய கொள்கை வகுக்கப்படும் என்றும் கூறிய கபில் சிபல் இந்த மூன்றிலும் ஒரு சமன்பாடு இருப்பது அவசியம் என்றும் கூறினார்.

பாதுகாப்புக் காரணங்களால் தாமதமாகும் 3ஜி சேவையை உடனடியாகத் தொடங்க தொலைத் தொடர்புத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

## தோல்வியை ஒப்புக்கொண்ட பிரதமர்-பா.ஜ.க



(புதுடெல்லி)

விலைவாசி உயர்வு, தீவிரவாதப் பிரச்சனை மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றில் தங்கள் அரசு தோல்வி அடைந்துவிட்டதை பிரதமர் மன்மோகன் சிங் ஒப்புக் கொள்வதாக அவரது புத்தாண்டுச் செய்தி அமைந்துள்ளது என்று பாரதீய ஜனதா கட்சி கூறியுள்ளது.


பல சமயங்களில் பிரதமரின் புத்தாண்டுச் செய்தி சம்பிரதாயமாகவே இருக்கிறது. அந்த வகையில் பிரதமர் மன்மோகன் விடுத்த வாழ்த்துச் செய்தியில், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், ஏழைகளுக்கான நலத் திட்டங்கள் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆகியவற்றில் தன்னுடைய அரசு தோல்வியுற்று விட்டதாக முதன் முறையாக ஒப்புக் கொண்டுள்ளார் என்று பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர் கூறியுள்ளார்.

வெள்ளிக் - கிழமையன்று பிரதமர் மன்மோகன் சிங் விடுத்த வாழ்த்துச் செய்தியில், பணவீக்க சவால், தேசிய பாதுகாப்பு மற்றும் நிர்வாகத் தூய்மைக்காக புத்தாண்டில் இரண்டு மடங்கு முயற்சியை மேற்கொள்வோம். இழந்த ஆற்றலைப் பெறும் சக்தி ஜனநாயகத்திற்கு உண்டு என்பதை நம்பி சிறப்பாகச் செயல்படுவோம் என்று கூறியிருந்தார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 100 நாள்களில் விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டு வருவோம் என்று ஒவ்வொரு 100 நாளும் வாக்குறுதி அளிக்கிறது என்றும் ஜவடேகர் குற்றம் சாட்டினார்.

பிரதமர் வாக்குறுதி அளித்து 24 மணி நேரம் கூட ஆகாத நிலையில் அரசு சமையல் எரிவாயு விலையை உயர்த்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

அரசு ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் உறுதியாக இருக்குமானால், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பான ஊழல் குறித்து விசாரணை செய்ய நாடாளுமன்றக் கூட்டுக் குழுவை அமைக்க வேண்டும் என்றும் அவர் கூறிப்பிட்டார்.




## சபரிமலைக்குச்சென்ற பக்தர்களின் கார் விபத்துக்குள்ளானதில் எட்டுப் பேர் பலி



(ஓமலூர்)

சபரிமலைக்கு சென்று திரும்பியபோது கார் விபத்துக் குள்ளானதில் ஐயப்ப பக்தர்கள் 8 பேர் பலியாகினர்.

ஆந்திர மாநிலம் குப்பத்தை சேர்ந்த வெங்கடராமன். இவரது மனைவி பாப்பம்மாள் ஐயப்ப பக்தர். இவரும் இவரது குடும்பத்தினர் 10 பேரும் சபரிமலை செல்ல முடிவுகட்டி இருந்தனர். இவர்கள் கடந்த 30ஆம் திகதி குவாலிஸ் காரில் சபரி மலைக்கு புறப்பட்டு சென்றனர்.

சபரிமலை சென்று ஐயப்பனை தரிசித்து விட்டு நேற்றுமுன்தினம் சொந்த ஊருக்கு காரில் திரும்பினார்கள். நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி அருகில் உள்ள தொப்பூர் பக்கம் கார் வந்தது.

பின்னர் கார் வந்து கொண்டிருந்த போது கார் கண் இமைக்கும் நேரத்தில் ரோட்டு ஓரம் நிறுத்தி இருந்த லாரி மீது பயங்கரமாக மோதியது.

இதில் கார் சுக்கு நூறாக நொறுங்கியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர். இதில் 7 பேர் ஆண்கள், ஒருவர் பெண்.

ரவிதேஜா என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை இறந்தார். இதனால் சாவு எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது. இந்த விபத்தால் தொப்பூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# சுற்றுலாத்துறையைப் பாதிக்கும் புதிய விசா முறை நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் இணையத்தின் ஊடாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வீசா விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வீசா கோரி விண்ணப்பிக்கும் நபர்களிடமிருந்து கட்டண அறவீடு செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும், இந்தத் திட்டம் சுற்றுலாத்துறையை பாதிக்கக்கூடும் எனவும் முன்னணி ஹோட்டல் உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சுற்றுலா வீசா கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளிடமிருந்து தற்போது கட்டணம் அறவீடு செய்யப்படுவதில்லை. எனினும், எதிர்வரும் காலங்களில் வீசா கட்டணமொன்றை அறவீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா உள்ளிட்ட 78 முக்கிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கட்டணம் அறவீடு செய்யப்படவுள்ளது. சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகளினதும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து வீசா கட்டணம் அறவீடு செய்யப்படவுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழிலில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வரும் தருணத்தில் இவ்வாறு கெடுபிடிகளை விதித்தால் அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் எனவும் ஹோட்டல் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இணையத்தின் ஊடாக வீசா விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அனுமதி வழங்கும் முறைமையினால் பல்வேறு நன்மைகள் காணப்படுவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறுகிய காலத்தில் சுலபமான முறையில் வீசா விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, வீசாக்களை வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கறுப்புப் பட்டியல் இடப்பட்ட மற்றும் நாட்டுக்குள் பிரவேசிப்பதனை அனுமதிக்கக் கூடாத நபர்களை இலகுவில் இனம் காண முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வீசா வழங்கும் நடவடிக்கைகளுக்குப் புலனாய்வுப் பிரிவினரும் ஒத்துழைப்பு வழங்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அரசியல் கட்சிகள் பதிவு; தேர்தல் திணைக்களம் ஏற்பாடு

(கொழும்பு)

தேர்தல் செயலகம் சில புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு அங்கீகாரமளித்துள்ளது. இதனடிப்படையில் 15 புதிய அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு செயலகம் தீர் மானித்துள்ளது. கடந்த வருடம் அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்வதற்கென விண்ணப்பித்திருந்த 86 அரசியல் கட்சிகளில் இருந்தே இந்த 15 புதிய அரசியல் கட்சிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றைப் பதிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது பதிவுசெய்யப்பட்ட 66 அரசியல் கட்சிகள் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் களம் இறங்குவதற்காக போட்டி போட்டுக்கொண்டு அரசியல் கட்சிகள் தமது பதிவுகளை மேற்கொள்வதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். இவ்வருடம் இடம்பெறவுள்ள தேர்தல்களில் தமது கட்சியை நிலை நிறுத்தி பிரதிநித்துவத்தைப் பெறுவதற்காக அரசியல் கட்சிகள் தென்னிலங்கையில் முட்டி மோதுவதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# இரட்டைப் பிரஜாவுரிமை பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையர்கள் இரட்டைப் பிராஜாவுரிமை பெறுவதனைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இந்த விடயம் குறித்து அரசின் உயர் மட்டம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன என்று எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தீர்மானம் இந்த நாட்டின் பூர்வீகத்தைக் கொண்ட வெளிநாடுகளில் பிரஜாவுரிமைகளைப் பெற்றவர்களை வெகுவாகப் பாதிக்கும் எனவும், குற்றம் சாட்டியுள்ள அவர், அரசாங்கம் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெருமளவில் பாதிக்கப்படுவோர் புலம் பெயர் தமிழர்களே எனவும் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானோர் தற்போது தாம் வாழும் நாடுகளின் பிரஜாவுரிமையைப் பெற்று வாழ்கின்றனர். ஆனால், இவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமை பெறுவதன் மூலமே இலங்கையிலும் சகல உரிமைகளையும் கொண்டவர்களாக வாழ முடியும். இதனைத் தவிர்க்கும் வகையிலேயே இன்றைய அரசு இரட்டைப் பிராஜாவுரிமை வழங்கும் முறையை நிறுத்த முயற்சிக்கிறது. இவ்வாறான தொரு நடைமுறை அமுலுக்கு வருமானால் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் இங்கு வரும் போது அவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளாகவே கருதப்படுவர்.

அத்துடன், அவர்களுக்கு இலங்கையிலுள்ள சொத்துகள் மற்றும் அவர்களது வைப்பிலுள்ள நிதிகளைக் கூடப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். மேலும் அவர்களால் இலங்கையில் சொத்துக்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையேற்படுவதுடன், முதலீடுகள் செய்தல், பணவைப்பு போன்ற எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாதிருக்கும். அதாவது அவர்கள் இந்த நாட்டுப் பிரஜைகளாக கருதப்படாமல் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளாகவே கருதப்படுவர்.

இவ்வாறானதொரு திட்டம் அமுலாக்கப்படுவதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் இலங்கையைச் சேர்ந்தவர்களின் சொத்துகளைக் கூட அரசு கையகப்படுத்த முடியும். ஆகவே இந்தத் திட்டமானது புலம்பெயர் தமிழர்களை இலக்கு வைத்தே அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டன் சென்று திரும்பிய பின்னரே அவர் இந்தப் புதிய நடைமுறையை அமுல்படுத்த முயற்சிப்பதாகவும் சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார்.

# பிச்சைக்காரர்களை இனங்கண்டு புனர்வாழ்வு மேற்கொள்ளத் திட்டம்



(கொழும்பு)

நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களை இனங்கண்டு அவர்களுக்குப் புனர்வாழ்வளித்து எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் இவ்வருடம் முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக செயற்படுத்துமாறு சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தனது அதிகாரிகளைப் பணித்துள்ளதுடன், இதற்கென ஒரு குழுவையும் நியமித்துள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள பிச்சக்காரர்களை இனங்கண்டு அவர்களை விசேட புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைத்துத் தேவையான தொழிற்பயிற்களை வழங்குமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். புனர்வாழ்வு நிலைங்களில் பயிற்சி பெற்ற பின்னர் இவர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்யக் கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

# ஊடகவியலாளருக்கான உபகரணங்கள் இலகு கடன் திட்டத்தின் கீழ் வழங்கல்

(கொழும்பு)

இலகு கடன் திட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு டிஜிட்டல் புகைப்படக் கருவிகள், மடிக்கணினிகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை பெற்றுக்கொடுக்க வெகுஜன ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பி.கனேகல தெரிவித்தார்.

ஊடகவிலயாளர்களின் நன்மை கருதி அரசாங்கம் ஒருலட்சம் ரூபா வரை இவ் இலகு கடன் திட்டத்தின் கீழ் மேற்படி உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இத்திட்டத்திற்கு 4 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டும். அரசாங்கம் ஊடகவியலாளர்களின் நன்மை கருதி 6வீத வட்டித் தொகையை செலுத்தும் என்றும் அமைச்சின் செயலாளர் கனேகல மேலும் தெரிவித்தார்.




அண்மையில் நடைபெற்ற வியாபாரி மூலை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழாவில் அதிபர் எம்.கனகலிங்கம் தலைமைதாங்கி உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எம்.கே.இரகுநாதன் உரையாற்றுவதையும், தோல்நோய் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரம்யா ரகுநாதன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

# ஏனைய சிறைக் கைதிகளிடமும் சாட்சியங்களைப் பதிவு செய்யுங்கள்

## அநுராதபுரம் சிறைக் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காலி பூஸா முகாமிற்கு விஜயம செய்து தமிழ் அரசியல் கைதிகளுடைய சாட்சியங்களை பதிவு செய்தமை போன்று ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் சாட்சியங்களையும் பதிவு செய்ய வேண்டும் என அனுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகள் நம்பகத்தன்மையும் முன்னேற்றகரமானது எனவும் இவர்கள் ஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.பி அத்துகொடவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் பல வருடங்கள் பிணையின்றியும், துரித விசாரணையின்றியும் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளான எமக்கு விடிவை ஏற்படுத்துங்கள் எனவும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு, தமது விடுதலையை அரசியற் கட்சிகள் உறுதிசெய்ய வேண்டும். எமது உறவுகளோடு நாம் சேர்ந்து வாழ்வதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தரும்படி ஆணைக்குழுவிடம் மன்றாட்டமாக வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது விடுதலையைத் துரிதப்படுத்த அனைத்துத் தரப்பும் முயற்சி செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

# கிராமங்களின் உச்சக்கட்ட அபிவிருத்தியில்தான் நாட்டின் மிகப்பெரும் அபிவிருத்தி தங்கியுள்ளது

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தி பணிகளில் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இருக்கக்கூடாது. அதுதான் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று தொலபுரம் கிழக்கு முன்கோடை கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களின் உச்சக்கட்ட அபிவிருத்தியில்தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. எனவே இனிவரும் காலங்களில் அபிவிருத்தியில் கவனிக்கப்படாத இவ்வாறான கிராமங்கள் உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படும்.

யாழ். மாவட்டம் யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்து வருகின்ற போதிலும், இம் மாவட்டத்திற்குள் இன்னும் அபிவிருத்தியடையாத பல கிராமங்கள் இருக்கின்றன. இவை இனிவரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படும். அந்த வகையில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின தலைமையில் இம்மாவட்டம் பல்வேறு வழிகளில் வளர்ச்சி கண்டு வருகிறது.


மேலும் இக்கிராம மக்கள் வீதி, கோவில் புனரமைப்பு, சன சமூக நிலையம், முன்பள்ளி, வேலைவாய்ப்பு தொடர்பில் தங்களுடைய பிரச்சினைகளை கூறினார்கள். நான் அவற்றினை கவனத்தில் எடுத்து படிப்படியாக தீர்வு காணுவதற்கு முயற்சி எடுக்கிறேன். குறிப்பாக இங்கொரு முன்பள்ளி அமைத்து தருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருகிறேன் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தியில் சமநிலையினைப் பேணி கடந்த காலங்களில் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்து வருகின்றோம். அதன்படி உங்களது கிராமமும் எதிர்காலத்தில் சகல வழிகளிலும் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு நாம் எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் ஜீவன் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி தொகுதிகள் அப்பிரதேச மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி. வலி. மேற்கு பிரதேச பொறுப்பாளர் வள்ளுவன், பிரதேச சபை உத்தியோகத்தர் அருணகிரிநாதன், தவராசா, மாதர்சங்க செயலாளர் சுஜாதா மற்றும் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு சீரற்ற காலநிலையே காரணம்- பிரதமர் டி.எம்.ஜயரட்ண



அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றமைக்கு சீரற்ற காலநிலையே காரணம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் முதல் டிசம்பர் வரையில் காணப்படுகின்ற சீரற்ற காலநிலை காரணமாகவே பொருட்களின் விலைகள் அதிகரிப்பதாக, பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருட்கள் அதிகமாக கிடைக்கும் காலப்பகுதியில் அதனைக் களஞ்சியப்படுத்தி, அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படும் காலப்பகுதியில் பயன்படுத்துவதன் மூலம் இந்த விலை அதிகரிப்புகளை கட்டுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நவீன வசதிகளுடன் ஆவண சேமிப்புத்திட்டம்; குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், நவீன வசதிகளைக் கொண்ட ஆவண சேமிப்புத்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்த உள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சுலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

உத்தேச திட்டத்திற்கமைய, கடவுச் சீட்டு விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டதன் பின்னர், உடனடியாக விண்ணப்பதாரிகளிடம் கையளிக்ககக்கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

புதிய முறைக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த 2009 ஆம் ஆண்டில் 4 லட்சத்து 84 ஆயிரத்து 967 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ள அதே வேளை, கடந்த ஆண்டில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## ஆட்கடத்தல் சம்பவங்கள் சந்தேகநபர் கொழும்பில் கைது

(கொழும்பு)

ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மலேசியாவைச் சேர்ந்த சந்தேகநபரொருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை கடத்தியுள்ளதாக விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபரை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## - உள்ளூராட்சிமன்ற தேர்தல் களம் -

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சில இடங்களில் தனித்துப்போட்டி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சில இடங்களில் தனித்தும் வேறு சில இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தும் போட்டியிடும் என அ.இ.ம.காவின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் அ.இ.ம.கா போட்டியிடும் என அவர் குறிப்பிட்டார். தனித்துப் போட்டியிடவுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கட்சியின் உயர்பீடம் விரைவில் கூடி தீர்மானிக்கும் என அமைச்சர் றிசாட் பதியுதீன் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஜனவரி முதலாம் திகதி முதல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸாக பெயர் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வட-கிழக்கில்...

எதுவுமின்றித் திரட்டிக்கொள்ளலாம் என்று அமெரிக்கா கருதியது. இதற்காக இலங்கை அரசுடன் பேச்சுக்களையும் நடாத்தியது. இதற்கு ஆரம்பத்தில் அரசு பச்சைக்கொடி காட்டியது.

எனினும் இவ்விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து அமைச்சரவையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இறுதியில் இவ்வாறனதொகு யுத்த ஆய்வு மூலம் பெறப்படும் இறுதி அறிக்கை நாட்டின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்றும், யுத்த குற்ற விசாரணைகளுக்கு கனமான சான்றாக இந்த இறுதி அறிக்கை அமைந்துவிடும் என்றும் அமைச்சரவை கருதியது. இதனால் அந்த முயற்சிக்கு அரசு அனுமதி வழங்க மறுத்து விட்டது.

இதனைத் தொடர்ந்தே அமெரிக்க அரசு மேற்படிதிரைமறைவு முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்காக பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு நிதியூட்டல் செய்து வருகிறது.

## இலங்கையின் பிரித்தானியத்...

போதிலும், அவரை ஜப்பானுக்கான தூதுவராக அனுப்பி வைப்பதற்கே மகிந்த ராஜபக்ஷ தற்போது தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.


முன்னாள் கடற்படைத் தளபதியை பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்கும் பட்சத்தில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்ததையடுத்தே அவரை ஜப்பானுக்கான தூதுவராக நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. போர்க் குற்றங்கள் தொடர்பில் அவரது பெயரும் சம்பந்தப்பட்டிருப்பதால் அவரது நியமனத்தையிட்டு பிரித்தானியா அதிருப்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம மற்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க ஆகியோருடைய பெயர்களும் பிரித்தானியத் தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படக் கூடியவர்கள் எனப் பரிசீலனைக்கு உட்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானியாவுடனான உறவுகள் அண்மைக்காலத்தில் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதால் அந்நாட்டுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்வதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து கொழும்பு இராஜதந்திர மட்டத்தில் காணப்படுகின்றது.

புதிய தூதுவர் நியமிக்கப்படும் வரையில் தற்போதைய பிரதித் தூதுவர் பி.எம்.அம்சா பதில் தூதுவராகக் கடமையாற்றுவார் எனவும் வெளியுறவு அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் இவ்வாரத்துடன் ஓய்வு பெறும் நிஹால் ஜெயசிங்க லஞ்ச ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் பதவியை அவர் ஏற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக கம்போடியாவுக்கான தூதுவராக அவர் நியமிக்கப்படலாம் எனத் தெரிகின்றது.




## அரசு ஐ.நா. ...

அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அவர்களின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது தெரியப்படுத்தப்பட வேண்டும். அதைச் செய்யாமல் எந்தவொரு ஆணைக்குழுவோ அல்லது குழுவோ தமது எண்ணபடி செயற்பட முடியாது. அவர்கள் தமது எல்லைகளைத் தாண்டி கால் வைக்க முடியாது.

அவர்கள் இங்கு வந்து நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சிமளிக்கலாம். ஐ.நா நிபுணர்குழுவில் உள்ள எந்தவொரு நபராயினும் வடக்கு, கிழக்குப் பகுதிக்குச் செல்ல விரும்பினால் அதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். ஏன் அவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்பது பற்றி அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் இன்னமும் கூட படையினர் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பகுதிக்குச் செல்வது உயிருக்கு ஆபத்தானது எனக் கருதினால் அங்கு செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது. அவர்களை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க மட்டுமே அனுமதிக்க முடியும்.

ஆனால் அவர்கள் சாட்சிகளை விசாரித்து தமது சொந்த நீதிமன்றத்தை இந்த நாட்டில் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்

# மீண்டும் நாடு திரும்புகின்றனர் தாய்லாந்தில் தங்கிய தமிழர்கள்!

(கொழும்பு)

அரசியல் தஞ்சம் கோரி மூன்றாவது உலக நாடொன்றிற்கு சட்டவிரோதமாக செல்லும் நோக்கில் தாய்லாந்தில் தற்காலிகமாகத் தங்கியுள்ள பல தமிழர்கள், மீளத் தாயகம் திரும்புவதாக தெரியவருகிறது.

கடந்த டிசம்பர் 23 ஆம் திகதிக்கு பின்னர் மேலும் 20 இலங்கைத் தமிழர்கள் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து பொலிஸார் நாட்டின் குடிவரவு குடிய கல்வு சட்டங்களை இறுக்கமாக் கிய நிலையில், அங்கு உரிய பயண ஆவணங்கள் இல்லா மல் தங்கியுள்ளவர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கைகள் எடு த்து வருகின்றனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் தாய்லாந்து பொலிஸாரும் குடிவரவு அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 250 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களில் சிலர் குடிவரவு சட்டத்தை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

நீதிமன்ற விசாரணைகளில் பெரும்பாலானவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதனை அடுத்தே இவர்கள் மூன்றாம் உலக நாடொன்றிற்கு செல்லும் எண்ணத்தை கைவிட்டு இலங்கை திரும்புவதாக பேங்கொக் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொக்குவிலில் கொள்ளையர் அட்டகாசம் கணினி, தங்க நகை கொள்ளையடித்து மாயம்!

## பீதியில் விழி பிதுங்கும் மக்கள்

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர் குழு அந்த வீட்டிலுள்ள பெறுதிமிக்க மடிக் கணினிகளையும், தங்க நகைகளையும் மற்றும் ஏனைய இலத்திரனியல் சாதனங்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலைவேளை மோட்டார் சைக்கிளில் சென்ற ஐந்து பேர் அடங்கிய கொள்ளையர் குழு ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்து வீட்டிலுள்ளவர்களின வாய்களை கறுப்பு நிற சலோரேப் மூலம் ஒட்டியபின், கொள்ளையர்கள் வீட்டு உரிமையாளரை அச்சுறுத்தி வீட்டில் உள்ள பெறுமதிமிக்க இலத்திரனியல் சாதனங்கள், தங்கநகைகள கொள்ளையடித்து விட்டுத் தலைமறைவாகியுள்ளனர். இச்சம்பவத்தினால் கொக்குவில் பகுதி மக்கள் அச்சத்துடன் பொழுதைக் களிப்பதாகவும் தெரியவருகிறது.

## கொழும்பில்...

கூட்டமைப்பு, தற்போது கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவது ஏற்கனவே அங்கு செல்வாக்கு பெற்றிருக்கும் மனோகணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்றே நம்பப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விமான எதிர்ப்பு...

5.56 மி.மீ. இயந்திர துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 200 தோட்டாக்கள் என்பனவும் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வெடிபொருட்கள் பதுங்கு குழியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

பொதுமக்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்படி தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## முடிவை மாற்றியது ஐ.நா...

இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதையடுத்து, ஐ.நா. நிபுணர் குழுவின் நோக்கம் பரந்தளவிலானது என்றும் அது இலங்கை செல்லவிரும்புவது தனியே நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திப் பதற்காக மட்டும் இருக்காது என்றும் ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியிருந்தார்.

இந்தநிலையில், இலங்கை அரசாங்கம் வேறு எவரையும் சந்திக்க அனுமதி மறுத்துள்ள தால் ஐ.நா நிபுணர் குழுவின் பயணம் இடம்பெறாது என்றே நம்பப்படுகிறது.

ஐ.நா நிபுணர்குழுவின் பய ணத்துக்கான முன்னேற் பாடுகளைக் கவனிப்பதற்காக அதன் பிரதம அதிகாரி றிச்சர்ட் பெனட் இன்னொரு அதிகாரியுடன் இந்தவாரம் இலங்கை வருவதற்குத் திட்டமிட்டிருந்தார். ஆனால், அவர் தனது பயணத்தை தற்போது கைவிட்டுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக ஐ.நா நிபுணர்குழுவின் இலங்கைக்கான பயணமும் கைவிடப்படலாம் என்றே நம்பப்படுகிறது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்தவாரம் வெளியாகும் என்றும் கொழும்பு ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

## புதிய பொது முன்னணி...

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி) தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியிடம் இணக்கம் தெரிவித்துள்ளதாக த.தே.வி.முயின் பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பில் பொது நிலைப்பாட்டை அடைவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். எமது ஒருமித்த நிலைப்பாட்டை மக்களுக்கு காண்பிப்பதற்காக தேர்தலில் ஒன்று சேர்ந்து போட்டியிட வேண்டும். நாங்கள் பிரிந்து நின்றால் மக்களுக்கு எம்மீதுள்ள நம்பிக்கை இழந்துபோய்விடும் என அவர் தெரி வித்தார்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி திங்கட்கிழமை கலைக்கப்படவுள்ளதாக கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்தது. விதிகளின்படி மார்ச் 12ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என்று செய்திகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி...

இந்தநிலையில், இறுதியாக 2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 4 வருடங்களுக்கொருமுறை உள்ளூராட்சி சபைத்தேர்தல்

நடத்தப்பட வேண்டிய நிலையில் இந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் அந்த காலவரையறை நிறைவடைகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்தவாரம் வெளியிடப்படவுள்ளது.

# பாடசாலை முதலாம் தவணை இன்று ஆரம்பமாகிறது

## க.பொ.த(சா/த) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பாடசாலைகள் 10ஆம் திகதியே ஆரம்பம்



(கொழும்பு)

புது வருடத்தின் முதலாவது பாடசாலைக்கான தவணைக் காலம் இன்று ஆரம்பமாகிறது. இதற்கிடையில் கல்விப் பொதுத் தராத சாதாரண பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற பாடசாலைகள், எதிர்வரும் 10ஆம் திகதியே திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள 81 பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி திறக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், புதிய தவணைக்கான பாடப் புத்தகங்கள் இதுவரையில் கிடைக்காத பாடசாலைகளுக்காக பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இந்த மாதம் 14ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

# உரும்பிராயில் ஆட்டோ சாரதி மாயம்; மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைபாடு

(உரும்பிராய்)

யாழ்ப்பாணம், உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதி ஒருவரை நேற்றிரவு முதல் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. சிவகுல வீதி மானிப்பாயைச் சேர்ந்த 27 வயதான எஸ் கோபிநாத் என்ற இளம் குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார்.

இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார். தனது ஆட்டோவில் நேற்றிரவு இவர் தொழில் நிமித்தம் வெளியே சென்றதாகவும், பின்னர் இவர் வீடு திரும்பியிருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. இதனையடுத்து அவரது குடும்பத்தினர் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

## மனித உரிமைகள் பேரவையில்...

நடைபெற்றுக கொண்டிருப்பதாக நம்பகமான தகவல் வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதற்கென ஆதரவு திரட்டும் நோக்கில் ஐரோப்பாவின் பலம் பொருந்திய சிலநாடுகளின் உயர்மட்ட அமைச்சர்களுடனான கலந்துரையாடல்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதற்கு மேலதிகமாக ஐ.நா. நிபுணர் குழுவின் ஊடாக இலங்கையின் போர்க்குற்ற ஆதாரங்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிரானதும், பாதிக்கப்பட்ட மக்களின் பாதிப்புக்களை வெளிக் கொண்டுவரும் வகையிலும் அமைந்த அறிக்கையொன்றை வரைவு செய்வதற்கான முயற்சிகளும் தற்போது இடம்பெற்றுவருகிறது. இதைவிட இராஜதந்திர ரீதியான சில நடவடிக்கைகளும் மேற்படி பேரவையின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் இடம்பெற்றுவருகின்றன.

# வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டம்!

## வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தகவல்



வட மாகாணத்தில் பல பாரிய அபிவிருத்தி திட்டங்கள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்

குறிப்பாக உட்கட்டமைப்பு, விவசாயம், கல்வி மற்றும் வீடமைப்பு தொடர்பான அபிவிருத் திப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இது வரை மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

A32 பெருந்தெரு முற்றாக செப்பனிடப்பட்டுள்ளதுடன், பூநகிரி பாலத்தின் நிர்மாணப் பணிகளும் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்த அவர், இந்துப் பாலம் விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவித்தார். இது தவிர, பெரும்போகத்திற்காக 30 ஆயிரத்து 366 ஹெக்டயர் நிலத்தில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/272)
தொலைபேசி: 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.